# மரணச் சீட்டை கேட்டு வாங்கவும்!

## ராஜேஷ்குமார்

உலகையே ஆட்டிப்படைக்க
நினைத்த மாவீரன்
நெப்போலியன் இறுதியில்
கப்பற்படைத் தலைவனான
நெல்சனிடம் தோற்று சிறை
பிடிக்கப்பட்டு கார்சிகா தீவில்
தனிமைப்படுத்தப்பட்டான்.
அங்கேயே அவன் புற்று
நோயில் வாடி
மரணமடைந்தான்.



### 1

ராம் நகரின் ஒரு குறுகலான வீதி. வீதியின் இடுப்பு பாகத்தில் இடம் பிடித்திருந்தது அந்த இரண்டு ஃப்ளோர்



கட்டிடம். 'ஞானம்பாள் நினைவு மகளிர் ஹாஸ்டல்' என்ற பெயிண்ட் போர்டு கட்டிட நெற்றியில் பேசியது. அதற்குக் கொஞ்சம் பக்கத்தில் ஆண்டெனா சாயந்தர வெய்யிலில் மின்னியது.

காம்பௌண்ட் கேட் வழியே நிறைய பெண்களின் பிரவேசமும், வெளியேறலும் நடந்துகொண்டிருந்தது.

ஹாஸ்டலின் உள்ளே - இடது பக்க வராந்தாவின் முதல் அறையாய்த் தெரிந்த அந்த அறையின் எண் 44.

அதன் கதவு தட்டப்பட்டுக் கொண்டிருக்க - தட்டிய கைக்கு சொந்தமான அந்தப் பெண் மிடியில் அழகாய் இருந்தாள்.

''டொக்... டொக்... டொக்...''

''இதோ... வர்றேன்...'' உள்ளிருந்து வந்த பலாப்பழக் குரல் சந்தியாவுடையது.

குரலைத் தொடர்ந்து -

கதவு திறக்கப்பட்டு -

ஃப்ரேம் போட்ட மாதிரி ஒரு ஜார்ஜெட் புடவையை ஏனோ தானோவென்று சுற்றியிருந்த சந்தியா தெரிந்தாள். அப்போதுதான் குளித்திருந்தாள். தலை ஈரத்தை டவலால் துவட்டிக்கொண்டிருந்த சந்தியாவுக்கு க்ரீம் நிற உடம்பு. கண்களிரண்டும் ஸ்காட்ச் கடல். உயர்தர ஹேர் ஆயிலால் பராமரிக்கப்பட்ட அமோகக் கூந்தல். எள்ளுப் பூவாய் நாசி. அதற்குக் கீழே ஈரத்தில் எந்நேரமும் முறுவலிக்கிற உதடுகள்.

''குளிச்சு டிரஸ் பண்றதுக்குள்ளே... கதவைப் பேர்த்து எடுக்கிற மாதிரி ஏண்டி தட்டறே?''

''அடிப்பாவி! மெல்லமாத்தானே தட்டினேன்?''

''சரி, என்ன விஷயம்?''

''கீழே உனக்கு ஃபோன் வந்திருக்கு...''

சடாரென மலர்ந்தாள்.

''சனியனே! இதை முதலிலேயே சொல்லக்கூடாதா? சாவகாசமா நின்னுட்டு ராமாயணம் பேசிட்டிருக்கே...''

அறைக் கதவை வெறுமனே சாத்திவிட்டு வேகமாய் வராந்தாவில் நடந்தாள். படியிறங்கினாள். ரிஸப்ஷன்

இளைஞி தனியாய் டேபிளில் எடுத்துக்கவிழ்த்திருந்த ரிஸீவரைத் தொட்டு - எடுத்து - காதோடு உரசவிட்டு -

''ஹலோ... சந்தியா ஹியர்...'' என்றாள்.

மறுமுனை, ''இச்'' என்றது.

அவள் எதிர்பார்த்த போன் தான்தான்.

''சொல்லுங்க ஜெயந்த்...''

''இப்ப நான் ஹோட்டல் ஹரீஷ்ல இருக்கேன்''

''சரி...''

''என்ன சரி? ஆறு மணிக்குள்ள நீ அங்கே வர்றே...!''

''வர்றேன்...''

''மறந்துடாதே!''

''சரி...''

''ரிஸீவரை வெச்சுட்டியா?''

''ம்...''

அவன் 'இச்' சொல்லிக்கொண்டிருக்கும்போதே ரிஸீவரைச் சாத்தினாள்.

மணிக்கட்டை உயர்த்தி நேரம் பார்த்தாள்.

5.30.

திரும்பவும் அறைக்குள் வந்தாள். ஐந்து நிமிஷ மேக்கப். வேறு ஸாரிக்கு மாறினாள். ஃபேன் சுழற்சியை ஸ்விட்சைத் தட்டி நிறுத்திவிட்டு - வெளியே வந்தாள்.

அறைக் கதவைப் பூட்டினாள்.

கீழே வந்து -

ரிஸப்ஷனைக் கடந்து...

சாலைக்கு வந்தாள்.

தூரத்தில் மெயின் ரோடு தெரிந்தது. சர்சர்ரென்று வாகனங்கள் நகர்ந்துகொண்டிருந்தன. மேற்குத் திசையில் சூரியன் நாளைக்கு வருவதாகச் சொல்லி 'டாட்டா' காட்டிக் கொண்டிருந்தான்.

சந்தியா மெயின் ரோட்டைத் தொட்டு -

காலியாய்ப் போன ஒரு ஆட்டோவை கைதட்டிக் கூப்பிட்டாள்.

''ஆட்டோ''

அவளைக் கடந்த ஆட்டோ அழைப்பை உணர்ந்து -



ஒரு அரை வட்டமடித்துத் திரும்பி வந்தது.

அவளோரம் நின்றது.

''எங்கேம்மா போகணும்?''

''ஹோட்டல் ஹரீஷ்...''

''ஏறும்மா...''

சந்தியா - உள்ளே நிரம்பியதும் ஜர்ர்ரென்ற ங்கரிப்போடு ஆட்டோ ஓட ஆரம்பித்தது. சாலையோர லக்ட்ரிக் போஸ்ட்கள் பின் பக்கம் நழுவ -

ஒரு பதினைந்து நிமிஷ பயணம்.

ஜனக் கொத்துகளோடு இருந்த ஹோட்டல் ஹரீஷ் வாசலில் நின்றது ஆட்டோ. இறங்கி மீட்டர் பார்த்து ஆட்டோவை அனுப்பிவிட்டு -

உள்ளே பிரவேசித்தாள்.

அந்த ஆறுமணியின் கலப்பட வெளிச்சத்தில் ஹோட்டலின் தலையில் HARISH என்று ஒளிர்கிற நியான் விளக்கு பிரகாசமில்லாமல் இருந்தது. கார் பார்க்கிங்கை கடந்து -

PUSH - என்று சொன்ன கண்ணாடிக் கதவைத் தள்ளி -

ஹோட்டலுக்குள் பிரவேசித்தாள்.

வரிசைப்பட்டிருந்த மேஜைகள் - சாப்பிடுகிற, குடிக்கிற, பேசுகிற ஜனங்களை சுமந்துகொண்டு தெரிய -

அவற்றிற்கிடையே பார்வையை ஊடுருவல் செய்து - ஜெயந்த்தைத் தேடினாள்.

வலப்பக்கம் பூராவும் பார்வையை அனுப்பி ஜெயந்த் கிடைக்காமல் போக - மறுபக்கம் தலையைத் திருப்பின விநாடி -

தோளை ஒரு வெதுவெதுப்பான கை தொடுவதை உணர்ந்து திரும்பினாள்.

காலைப் புஷ்பம் மாதிரி மலர்ந்தாள்.

ஜெயந்த்!

அழகான பல் வரிசை காட்டி புன்னகைத்துக்கொண்டிருந்தான். ஜீன்ஸிலும் டி - ஷர்ட்டிலும் நிரம்பியிருந்தான். டி - ஷர்ட் வாசகம்;

FOR YOUR EYES ONLY என்றது. அடர்த்தியான தலைமு
மிகச் சமீபத்தில் ட்ரிம் பண்ணின மாதிரித் தெரிந்தது.

''காக்க வெச்சுட்டேனா ஜெயந்த்?''

''அதான் ஆறுமணிக்கு வந்துட்டியே...!''

இருவருமாய் மேஜைகளுக்கிடையே நடந்தார்கள்.

ஒரு சௌகர்யமான மேஜையைத் தேர்ந்தெடுத்
எதிரெதிராக உட்கார்ந்தார்கள். வந்து நின்
வெயிட்டரிடம் ''ரெண்டு வெஜ். கட்லெட்'' என்
சொல்ல அவன் நகர்ந்தான்.

''அப்புறம்?''

''அப்புறமென்ன நீங்கதான் சொல்லணும்... நா
ஒவ்வொரு தடவை உங்களை மீட் பண்றப்பவு
சொல்ற விஷயம்...''

ஜெயந்த் சிரித்தான்.

''எப்ப நம்ம கல்யாணம்? அதானே கேக்கப் போற?''

''ம்... அதான். எப்போ உங்க பெரியப்பாக்கிட்டே
நம்ம காதல் விஷயத்தை சொல்லப் போறீங்க...?''

''ம்ஹூம்... சொல்ல முடியாது...''

நிமிர்ந்தாள்.

''ஏன் ஜெயந்த்?''

''உன்கிட்டதான் ஏற்கெனவே சொல்லியிருக்கேனே...
பெரியப்பாவுக்கு காதல் விவகாரம்னாலே அலர்ஜி...''

''ஸோ?''

''ஸோ, அவர்கிட்டே சொல்லப் போறதில்லை...''

''அப்ப நம்ம கல்யாணம் அவ
சம்மதமில்லாமேதான் நடக்கும்...?''

''அது முடியாது... அப்படி செஞ்சா அவரோட சொத்து
எனக்கு கிடைக்காம போயிடும்...''

''அப்ப என்னதான் பண்றது ஜெயந்த்?''

''எனக்கு நீயும் வேணும், பெரியப்பாவோட சொத்தும்
வேணும்...''

''உங்க பெரியப்பா செத்து
போனதுக்கப்புறமாத்தான் அவரோட சொத்து
உங்களுக்கு வரும்னு சொல்லியிருக்கீங்க?''



''ஆமா, நேத்துகூட ஃபேமிலி லாயரைப் பார்த்து
கன்ஃபார்ம் பண்ணிக்கிட்டேன். பெரியப்பா அத்தனை
சொத்தையும் எனக்குத்தான் எழுதி வெச்சிருக்கார்...
ஆனா அவருக்கப்புறமாத்தான் எனக்கு வரும்... அவர்
இருக்கற வரைக்கும் நான் ஒரு பைசாகூடத் தொட
முடியாது...''

''அப்படின்னா உங்க பெரியப்பா சாகற வரைக்கும்
காத்திருக்கச் சொல்றீங்களா?''

ஜெயந்த் தலையாட்டி மறுத்தான்.

''நோ... நோ... அவர் சாகற வரைக்கும் நாம
காத்திட்டிருக்க வேண்டியதில்லை. அவரை சாகடிக்கற
வரைக்கும் காத்திருந்தா போதும்...''

## 2

தன் அழகான பெரிய விழிகளை அகலமாய் விரித்து
ஜெயந்த்தைப் பார்த்தாள் - சந்தியா. ஜெயந்த் சொன்னதை
பக்கத்திலிருந்த டேபிள்களில் உட்கார்ந்திருந்தவர்களில்
யாராவது கேட்டிருப்பார்களா? என்கிற பயத்தோடு
சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு - கேட்டாள். அதற்குள்
வியர்த்திருந்தாள்.

''ஜெயந்த், நீங்க என்ன சொல்றீங்க?''

''அவரை இல்லாமே பண்ணணும்னு
சொல்றேன்...''

சந்தியா குரலை வெகுவாய்த் தாழ்த்திக்கொண்டாள்.

''ஜெயந்த்... நல்லா யோசிச்சு சுய சிந்தனையோடதான்
பேசறீங்களா?''

''நல்லா யோசிச்சுட்டேன்... வேற வழியேயில்லை...''

''ஒருத்தரை முடிக்கிறதென்ன அவ்வளவு சுலபமான
வேலைன்னு நினைக்கறீங்களா?''

ஜெயந்த் புன்னகைத்தான்.

''கஷ்டமான வேலைதான்... அதுவும் போலீஸ்ல
மாட்டிக்காம கொலை பண்றது... இன்னும்

படுகஷ்டமான காரியம்தான்...''

''நீங்களே இதையும் சொல்றீங்க...''

''ஆமா சந்தியா... கொலை பண்றது கஷ்டமான காரியம்தான். ஆனா பெரியப்பாவோட சொத்து எனக்கு சீக்கிரம் கிடைக்கணும்னா... அந்த கஷ்டமான காரியத்தையும் பண்ணித்தான் ஆகணும். இப்ப அவர் என் பேர்ல எல்லா சொத்துக்கும் உயில் எழுதி வெச்சிருக்கார்... அவரோட மனசு மார்றதுக்குள்ளே அவரைத் தீரத்துக்கட்டினாத்தான் முடியும்.''

''இது... எ... எப்படி... முடியும்...?''

''வழி இருக்கு... நாளைக்கு இந்நேரம் அவ இருக்கமாட்டார்...

- சட்டென்று நிமிர்ந்தாள்.

''ஜெயந்த்!''

''எப்படின்னு சொல்றேன்... வெயிட்டர் வர்றான்... சாப்பிட்டு முடி...''

வெயிட்டர் கொண்டு வந்து வைத்த வெஜிடேபிள் கட்லெட்டை மௌனமாய் சாப்பிட்டு முடித்துவிட்டு வாஷ்பேசினில் போய்க் கை அலம்பிவிட்டு வந்தார்கள் காப்பி காத்திருக்க - அதையும் வயிற்றுக்குள் வார்த்துக்கொண்டு எழுந்தார்கள்.

''அது சம்பந்தமாகத்தான் இப்ப ஒருத்தரைப்போய் பார்த்துவிட்டு வரப் போறோம்...''

பில்லுக்குப் பணம் தந்துவிட்டு வெளியே வந்தார்கள் டூ வீலர்ஸ் பார்க்கிங்கில் சொருகி வைத்திருந்த பஜாஜ் செட்டாக்கை வெளியே உருவினான். இக்கரை உதைத்து ஸ்டார்ட் செய்தான்.

''ஏறிக்கோ சந்தியா...''

சந்தியா புடவை நுனியை இடுப்பில் சொருகிக்கொண்டு பில்லியனில் ஏறி நிரம்பினாள்.

கியரை மாற்றி -

ஆக்ஸிலேட்டரை முறுக்கினான்.

ஸ்கூட்டர் ஹோட்டலைக் கடந்து சாலையில்



நுழைந்தது. HMT - நேரம் பார்த்தான் ஜெயந்த். 6.40.

சாலையில் பரவியிருந்த எழுபது சதவீத இருட்டை ஹெட்லைட் வெளிச்சம் துடைத்துக்கொண்டு போனது...

இருபது நிமிஷங்கள் ஓடி ஏறக்குறைய சிட்டி லிமிட்டைத் தாண்டி -

ஒரு உப பாதையில் பிரிந்து -

அந்தச் சின்ன ஓட்டு வீட்டைத் தொட்டார்கள். வீட்டின் முன்பக்கம் ஒரு மல்லிகைப் பந்தல் பச்சைக் கம்பளத்தில் வெள்ளைப் புள்ளி தெளித்த மாதிரி பூக்களை மலர்த்தியிருந்தது. வாசற்படியில் நாய் ஒன்று சுருண்டு படுத்திருந்தது.

இவர்களின் வரவால் கலைக்கப்பட்டு நிமிர்ந்து - ஒருமுறை குரைத்துவிட்டு 'இவன் போடுகிற சாப்பாட்டுக்கு இதுபோதும்' என்கிற தினுசில் வாலை ஆட்டிக்கொண்டு எழுந்து ஓரமாய்ப் போய் படுத்துக்கொண்டது.

ஜெயந்த் கதவை அடைந்து தாளை அசைத்து சப்தித்தான்.

''டொக்... டொக்... டொக்...''

நிமிஷ அவகாசம்.

கதவு திறந்தது.

அந்த தாட்டியான இளைஞன் திறந்த கதவுக்கப்பால் தெரிந்தான். மஞ்சள் நிற பனியனிலும் கட்டம் போட்ட லுங்கியிலுமாய் நிரம்பியிருந்தான். மீசை அரிவாள்மணை சைஸில் அடர்த்தியாய் வளைந்திருந்தது. கண்களில் குங்குமம் கொட்டினமாதிரி இருந்தான். சிரித்துக்கொண்டிருந்த உதடுகளில் பீடி குடிப்பதற்கான அடையாளங்கள். பல்வரிசை தப்பியிருக்க - ஒவ்வொரு பல்லிலும் கறை பிடித்துக்கிடந்தது.

ஜெயந்த்தை பரிச்சயமாய்ப் பார்த்து சிரித்து வரவேற்றான்.

''வாங்க ஸார்... வாங்க...''

உள்ளே நுழைந்தார்கள் ஜெயந்த்தும், சந்தியாவும். கயிற்றுக் கட்டிலைக் காண்பித்து - உட்காரச் சொன்னான்.

''உட்காருங்க ஸார்...''

இருவரும் பரவினார்கள்.

சந்தியாவைப் பார்த்துக் கேட்டான்.

''இவங்க யாரு?''

''இவங்கதான் நான் கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணு...''

''சரிதான்...''

- என்று சொல்லி சிரித்தான்.

சில விநாடிக்குப் பின் - கேட்டான்.

''என்ன விஷயம் ஸார்? என்னோட வீட்டைத் தேடி வந்திருக்கிங்க...''

''உன்னோட உதவி தேவைப்படும்னு அன்னிக்கு சொல்லியிருந்தேனே... தன்ராஜ்...''

''ஆமா... அது சொல்லி நாலைஞ்சு மாசமாச்சே?''

''இப்ப தேவைப்படுது...''

''இப்போன்னா...?''

''அதாவது... நாளைக்கு சாயந்தரம் ஏழு முப்பதுக்கு நீ ஒருத்தரை முடிக்கணும்?''

காதோரமாய் சொருகி வைத்திருந்த பாதி பீடியை எடுத்து உதட்டுக்குக் கொடுத்துக்கொண்ட அவன் அலட்சியமாய் ஜெயந்த்தை பார்த்தான்.

''யாரை''

''என்னோட பெரியப்பாவை...''

தன்ராஜ் சிரித்தான்.

''ஓ! கிழட்டுக் கேஸ்...''

''கிழடானாலும் படு ஸ்ட்ராங்...''

''நான் கவனிச்சுக்கிறேன். ஆளை எங்கே வெச்சு முடிக்கணும்?''

''நாளைக்கு சாயந்தரம் அவர் ஊட்டிக்கு புறப்பட்டுப் போறார்... வழியில் ஏதோ ஒரு இடத்தில் காரை



வழிமறிச்சு நிறுத்தி காருக்குள்ளேயே வச்சி அவரைத் தாக்கி மயக்கமடைய வச்சு... காரை பள்ளத்தில் உருட்டிவிட்டுடணும்...''

''ஆக்ஸிடெண்ட் மாதிரி செய்யணும்...?''

''ஆமா...''

தன்ராஜ் தீப்பெட்டியைத் தேடிக்கொண்டே சிரித்தான்.

''பண்ணிட்டா போகுது... நம்ம ரேட்டெல்லாம் உங்களுக்குத் தெரியுமில்ல?''

''சொன்னாத்தானே தெரியும்?''

''சொல்றேன்... அதுக்கு முன்னாடி ஒரு சின்ன சந்தேகம்...!''

''என்ன?''

''உங்க பெரியப்பாவைக் கொலைபண்ணச் சொல்றீங்க?''

''ஆமா...''

''ஏன் அவரைக் கொலை பண்றீங்க...? காரணத்தை தெரிஞ்சுக்காமே நான் காரியத்தை ஒத்துக்கிறதில்லை...''

ஜெயந்த் அவனிடம் காரணத்தை சொன்னான். முழுவதுமாய்க் கேட்டு முடித்தபின்...

சிரித்தான்.

''அதான் கேட்டேன்! சொத்து விஷயத்துக்காக் கொலை பண்றதுன்னா... நம்ம ரேட் கொஞ்சம் ஜாஸ்திதான்...''

''பரவாயில்லை சொல்லு, எவ்வளவு வேணும்?''

''அம்பதாயிரம்...''

''அவ்வளவுதானே... தர்றேன்...''

எழுந்தார்கள்.

''ஸார்...''

''என்ன!''

''உங்க பெரியப்பாவை எனக்கு ஒரு தடவை காட்டிடுங்க... அப்புறம் அவர் வரப்போற கார் நம்பரை சொல்லிடுங்க...''

''ம்... காலைல உனக்கு அவரைக் காட்டிவிடறேன்...''

''அப்புறம்...''

குரலை இழுத்தபடியே தலையை சொறிந்தவன் - கேட்டான்.

''அட்வான்ஸா ஏதாவது வெட்டிட்டுபோங்க ஸார்...''

ஜெயந்த் பாக்கெட்டுக்குள் கையைச் செலுத்தி தேடி - சில நூறுகளை எடுத்து மேஜையின்மேல் போட்டான்.

''இதை வச்சுக்க... தன்ராஜ்... சொத்து என் கைக்கு வரட்டும்... மீதியை வாங்கிக்கலாம்...''

''அது சரி ஸார்... பணம் எங்கே போயிடப் போகுது?''

''நாங்க கிளம்பறோம்... நாளைக்குக் காலைல பத்து மணிக்கு நீ ஆபீஸுக்கு வந்துடு. பெரியப்பாவை நீ பார்த்துடலாம்.''

''சரி ஸார்...''

வெளியே வந்தார்கள்.

ஸ்கூட்டரில் பரவினார்கள். ஸ்டார்ட் செய்து நகர்த்தினான் ஜெயந்த்.

''ஜெயந்த்...''

''என்ன சந்தியா?''

''ஒரு சந்தேகம்...''

''கேளு...''

''உங்க பெரியப்பா தன்னோட சொத்து பூராத்தையும் உங்க பேருக்குத்தான் எழுதிவச்சு இருக்கார் இல்லையா?''

''ஆமா...''

''அவர் திடீர்னு இறந்தா... போலீஸோட முதல் சந்தேகம் உங்கமேல் திரும்பாதா?''

''கண்டிப்பா திரும்பும்.''

''அப்ப நீங்க மாட்டிக்க மாட்டிங்களா?''

ஜெயந்த் புன்னகைத்தான்.

''அதை நினைச்சுப் பார்க்காம இருப்பேனா சந்தியா...? அதுக்கும் ஒரு வழி வச்சிருக்கேன்...''



**வெள்ளையன் ஆஷ் துரையை
துப்பாக்கியால்
சுட்டுக்கொன்றுவிட்டு
எதிரியிடம்
மாட்டிக்கொள்வதற்கு முன்
தனக்குத்தானே
சுட்டுக்கொண்டு
மரணமடைந்தான் விடுதலை
வீரன் வாஞ்சிநாதன்.**



# 3

காருண்யாஸ் ஸ்டீல் லிமிடெட்.

இயந்திர ஓசைகள் சாலைவரை எட்டிக்கொண்டிருந்தது. அலுவலகக் கட்டிடத்துக்கு முன்பக்கம் கார்டன் அமைத்து சிரத்தையாய் பராமரித்திருந்தார்கள். லானுக்கு நடுவே - ஒரு சிமெண்ட்டுப் பெண் சிலையாகி போஸ் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

போர்டிகோவையும்

வராந்தாவையும் கடந்து -

'PRODUCTION MANAGER' - என்று பிளாஸ்டிக் எழுத்து பதித்த கதவைத் திறந்து உள்ளே போய் சேரில் ஜெயந்த் உட்கார்ந்தபோது -

கதவு தட்டப்பட்டது.

''டொக்... டொக்... டொக்...''

''யெஸ்... கமின்...''

தன்ராஜ் உள்ளே வந்தான்.

கொஞ்சம் சுத்தமாய் - காட்டன் சர்ட், பேண்ட் போட்டிருந்தான்.

''வா தன்ராஜ்...''

தன்ராஜ் சிரித்தான்.

''போர்டிகோவில் நிக்கற காரைப் பார்த்தியா?''

''புருவம் சுருக்கினான் தன்ராஜ்.

''எந்தக் கார் ஸார்?''

''அந்த ஜன்னலுக்குப் போ!''

போனான்.

''கர்ட்டனை விலக்கு.''

விலக்கினான்.

''வலது பக்கம் பாரு...''

பார்த்தான்.

''போர்டிகோ தெரியுதா?''

''தெரியுது...''

''அங்கே ஒரு கார் சிவப்பு கலர்ல நிக்குதே அதுதான்...''

தன்ராஜ் பார்த்துவிட்டுத் திரும்பினான்.

''போகும்போது நெம்பரைப் பார்த்துக்க... அதுலதான் பெரியப்பா ஊட்டி வருவார்...''

''உங்க பெரியப்பாவை நான் பார்க்க வேண்டாமா?''

''ஏற்பாடு பண்றேன். ஒரு நிமிஷம் - ''

இண்ட்டர்காமைத் தன்னருகே இழுத்தான். ஏதோ ஒரு பட்டனை அழுத்தினான்.

மறுமுனையில் 'ஙி...ஙி...' போனது.

தொடர்ந்து

ரிஸீவர் எடுக்கப்பட்டது.

''ஹலோ...''

ஜெயந்த்தின் பெரியப்பா கைலாசத்தின் கரகரப்பாக குரல் கேட்டது.

பெரியப்பா! நான் ஜெயந்த் பேசறேன்...''

''சொல்லு... ஜெயந்த்''

தம்ம ஃபாக்டரிக்கு இன்னொரு கார்டனர் வேணும்னு சொல்லியிருந்தீங்களே... ஒரு ஆள் வந்திருக்கான்...



அனுப்பிவெக்கிறேன்... பார்க்கறீங்களா?''

''அனுப்பு...'' என்றார்.

ஜெயந்த் ரிஸீவரைக் கவிழ்த்துவிட்டு தன்ராஜை ஏறிட்டான்.

''தன்ராஜ்...''

''ஸார்?''

''வராந்தாவில் நேரா போய் - கடைசி ரூம்ல என்னோட பெரியப்பா இருப்பார்... தோட்ட வேலைக்கு ஆள் வேணும்னாங்க... வந்திருக்கேன்னு சொல்லு... அப்படியே அவரைப் பார்த்துக்க...''

அவன் தலையாட்டிவிட்டு நகர்ந்தான்.

''ஒரு நிமிஷம் தன்ராஜ்...''

திரும்பினான்.

''இங்கே தோட்ட வேலைக்கு ஆள் வேணுமுனு யார் உனக்கு சொன்னான்னு கேட்டா என்ன சொல்லுவே?''

''என்ன ஸார் சொல்றது?''

''விஜயன் ஸார் சொன்னாருன்னு சொல்லு...''

''சரி...''

சொல்லிவிட்டு கதவைத் திறந்து வெளியேறி வராந்தாவுக்கு வந்தான்.

வராந்தா கடைசியில் லாமினேஷன் செய்யப்பட்ட ஒரு அறைக்கதவு தெரிந்தது.

அதை நோக்கி நடந்தான்.

அவ்வப்போது ஃபைலைக் கையில் பிடித்த நபர்கள் எதிரே வந்தார்கள். மொசைக் தரை பனிக்கட்டித்தனமாய் ஸ்கேட்டிங் விளையாடலாம்போல் இருந்தது. ஏதோ ஒரு அறையில் எழுந்த டைப்ரைட்டர் சத்தம் தட்தட்டென்று காதை அறைந்தது.

கைலாசத்தின் அறையைத் தொட்டான்.

கண்ணாடிச் சதுரங்களுக்குள் அவர் தெரிந்தார். ஏதோ ஃபைலைப் பார்த்துக்கொண்டிருந்தார். இவன் கதவைச் சப்தித்ததும் -

அவர் கையசைக்க -

தன்ராஜ் உள்ளே போனான்.

பரந்த மேஜைக்கப்பால் குஷன் வைத்த நாற்காலியில் நிரம்பியிருந்த கைலாசம் நல்லசிவப்பில் நிறத்தை வாங்கியிருந்தார். கண்களில் தங்க ஃபிரேம் வேய்ந்த கண்ணாடி தொற்றியிருந்தது. டை அடிக்கப்பட்ட கேசம் ஒழுங்கான வாரலில் இருந்தது. பேசுவதற்காக வாயைத் திறந்தபோது - ஒரு தங்கப்பல் மஞ்சள் வெளிச்சமாய் ஃப்ளாஷ் அடித்தது.

''என்னப்பா?''

''இங்கே தோட்ட வேலைக்கு ஆள் வேணும்னு... சொல்லிவிட்டாங்க...''

''யாரு சொன்னா?''

''விஜயன் ஸார் சொன்னாரு...''

அவனை மேலிருந்துகீழ் ஒரு தரம் பார்த்தார் கைலாசம்.

''இதுக்கு முன்னாடி எந்த இடத்துல கார்டனிங் பார்த்தே...?''

''மெட்ராஸ்ல ஒரு பங்களாவுல பார்த்துட்டிருந்தேன் ஸார்...''

''அங்கே இப்போ வேலை பார்க்கலையா...?''

''இல்ல ஸார்...''

''ஏன்?''

''அவங்க பங்களாவை வித்துட்டு டில்லிக்குப் போய் செட்டில் ஆயிட்டாங்க ஸார். என்னையும் கூப்பிட்டாங்க... நான் வரலைன்னு சொல்லிட்டேன்...''

தன்ராஜ் கதையை அளந்துவிட்டான்.

கொஞ்ச நேரம் பேப்பர் வெயிட்டை சுழற்றியபடியே அவனைப் பார்த்த கைலாசம் -

''சரி அடுத்த வாரம் வா...'' என்றார்.

கை குவித்தான் தன்ராஜ்.

''ரொம்ப நன்றிங்க...''



வெளியேறினான்.

திரும்ப -

ஜெயந்த்தின் அறைக்கு வந்தான்.

''என்ன தன்ராஜ் பெரியப்பாவைப் பார்த்துகிட்டியா?''

''ம்... பார்த்துகிட்டேன் ஸார்...''

''என்ன சொன்னாரு?''

''நீங்க சொன்ன மாதிரியே 'யாரு உனக்கு இங்கே வேலை இருக்குன்னு சொன்னாங்க'ன்னு கேட்டார்...''

''சொன்னியா விஜயன் ஸார் சொன்னார்னு?''

''ம். சொன்னேன்...''

''அப்புறம்...''

''அடுத்த வாரம் வா சொல்றேன்னாரு...''

''சரி விடு! நீ வேலைக்கு வரப் போறதில்லை... அவரை நல்லா பார்த்துகிட்டியா?''

''ம். பார்த்துட்டேன்...''

''கீழே போகிறபோது அவர் காரைப் பார்த்துக்க...''

''சரி ஸார்...''

''ஜாக்ரதை தன்ராஜ்... ஒருத்தரைக் கொல்ற விஷயம் சாதாரண விஷயமில்லை...''

''எனக்குத் தெரியும் ஸார்... நான் கச்சிதமா காரியத்தை முடிக்கிறேன்... நீங்க கவலைப்படாமே இருங்க ஸார்...''

## 4

மாலை 5.45. மணி.

கைலாசமும் ஜெயந்தும் அறையைவிட்டு வெளியே வந்தார்கள். ஜெயந்த்தின் கையில் ஒரு ப்ரீஃப் கேஸ். ஆபீஸ் போர்டிகோவில் இருந்த காரைத் தொட்டதும் கதவைத் திறந்து ப்ரீஃப் கேஸை உள்ளே வைத்தான் ஜெயந்த்.

கைலாசம் முன் சீட்டில் பரவி -

ஸ்டியரிங் பிடித்தார். இக்னிஷன் சிஸ்டத்தை உசுப்புவதற்கு முன்னால் -

மெல்லிய குரலில் ''ஜெயந்த்'' என்றார்.

''என்ன பெரியப்பா?''

''ஒரு பப்ளிகேஷனை ஆரம்பிக்கப் போறதா சொன்னேனே ஞாபகமிருக்கா...?''

''இருக்கு...''

''அதுக்கான மெமோரெண்டம், ஆர்டிகள்ஸ் பிரிபேர் பண்ணணும்... நான் ஊட்டியிலிருந்து வர்றதுக்குள்ளே - நம்ம ஆடிட்டரைக் கலந்துகிட்டு ஏற்பாடு பண்ணிடு.''

''சரி பெரியப்பா''

''அப்புறம் குரோவி எஸ்டேட்டிலிருந்து 'பாபுராவ்'ன்னு ஒருத்தர் என்னைப் பார்க்க வருவாரு... அவரை நான் ரெண்டு நாள் கழிச்சு போன்ல கான்டாக்ட் பண்ணிக்கறேன்னு சொல்லிடு...''

''சொல்லிடறேன்...''

காரை ஸ்டார்ட் செய்தார். சட்டென்று அணைத்தார். ஜெயந்த்தை ஏறிட்டார்.

''நாளைக்கு ஃபாக்டரில...''

''சொல்லுங்க...''

''பத்து ஜி.டி.வில் டெஸ்பாட்ச் ஆகணும்... கொஞ்சம் அதை க்ளோஸ் ஃபாலோ அப் பண்ணி அனுப்பிடு...''

''நான் பார்த்துக்கறேன்...''

இக்னிஷியனை உசுப்பி - ஆக்ஸிலேட்டரில் காலை வைத்து -

காரை நகர்த்த ஆரம்பித்தார்.

கார் ஆஃபீஸ் லானை சுற்றிக்கொண்டு -

காம்பௌண்ட் கேட்டைக் கடந்து -

வெளியேறியது.

'பெரியப்பா!

இதுதான் உன் கடைசிப் பயணம்!'

மனசுக்குள் சந்தோஷம் கொப்பளிக்க -

திரும்பி தன் அறைக்கு வந்தான் ஜெயந்த்.

கைலாசத்தின் கார் மெயின் ரோட்டை பிடித்திருந்தது.



ஸ்டியரிங்கை வளைத்துக் கொண்டே மணிக்கட்டைத் திருப்பி நேரம் பார்த்தார்.

6.00

சாலையின் ஜனநெரிசலை லாவகமாய் கையாண்டு காரை பறத்தினார். ஹெட்லைட் விளக்குகளை எரியவிடலாமா வேண்டாமா என்று யோசிக்க வைக்கிற மந்தமான வெளிச்சத்தில் கிராஸ்கட் ரோட்டை பின்னுக்குத் தள்ளினார்.

மேட்டுப்பாளையம் ரோட்டைத் தொட்டது கார்.

நகரின் எல்லையைக் கடக்கும் வரை - ஸ்பீடா மீட்டரின் முள் நாற்பதில் தத்தளித்தது.

பின் -

அறுபதுக்குப் போயிற்று.

நாற்பது நிமிஷங்களில் - மேட்டுப்பாளையத்தைத் தொட்டு - குளிர்ச்சியான கல்லார் பிரதேசத்தைத் தாண்டி ஊட்டிக்குப்போகும் மலைப் பாதையைத் தொட்டது.

கியரை மாற்றினார் கைலாசம். இருட்டு மலைப் பிரதேசத்தின் வளைவுகளில் அப்பியிருக்க - காரின் ஹெட்லைட்டுகள் அந்த இருட்டை தன் பிரகாசமான வெளிச்சத்தால் ஒட்டடை அடித்தது.

கார் இருபது நிமிஷங்கள் மலைப் பாதையில் சிரமமாய் ஏறி -

அந்த ஹேர்பின் வளைவைத் தொட்ட போது -

குறுக்கே யாரோ நிற்பது போலத் தெரிய -

காரை சட்டென வேகம் குறைத்து ஹாரனிட்டார் கைலாசம்.

''பீங்க்... பீங்க்...''

நடுரோட்டில் நின்ற உருவம் அசையவில்லை.

அந்த உருவத்தின் அருகே கொண்டு போய்க் காரை நிறுத்தி - ஹெட்லைட் வெளிச்சம் வழியே அவனைப் பார்த்தார்.

அவன் -

தன்ராஜ்!

'இவன் எங்கே இங்கே வந்தான்?'

கைலாசம் யோசித்துக்கொண்டிருக்கும்போதே -
கையில் பளபளத்த அரையடிக் கத்தியோடு -
தன்ராஜ் அவரை நோக்கிப் பாய்ந்தான்.

---

**1764 அக்டோபர் 15இல் கான்சாகிபு வெள்ளையர்களால் பெரிய மாமரத்தில் தூக்கிலிடப்பட்டபோது மூச்சை அடக்கிப் பழக்கப்பட்ட அவர் இரண்டு முறை திரும்பவும் எழுந்து நின்றார். கடைசியில் மரணமடைந்த அவரது தலையை வெட்டி திருச்சிக்கும், உடல் உறுப்புக்களை மதுரை, தஞ்சை, பாளையங்கோட்டை, திருவாங்கூர் முதலிய இடங்களுக்கும் துண்டு துண்டாக வெட்டி அனுப்பி வைத்தனர்.**

# 5

லக்ஷ்மிகாந்த் பூப்போட்ட நைட்டிக்குள் அடைக்கலமாகியிருந்தார். அபாரமான உயரத்தை வாங்கியிருந்தார். புஷ்டியான மீசை உதட்டின் மேல்பரப்பில் அமோகமாய்ப் பயிராகியிருக்க - தலைக்கேசம் வெளுப்பாகியிருந்தது. அந்தப் பிராந்தியத்தில் நாலைந்து எஸ்டேட்டுகளை வளைத்துப் போட்டிருந்தார்.

அறை ஹீட்டரின் கணகணப்புடன் இருந்தது.

லக்ஷ்மிகாந்த் ரொம்ப நேரமாய் ஜன்னலோரமாய் நின்றிருந்தார்.

அந்த ஹேர்பின் வளைவும் - அதன் வளைவில் ஹெட்லைட் வெளிச்சத்தோடு நின்றிருந்த அந்த சிவப்பு மாருதி காரும் -

அவர் நிற்கிற ஜன்னலிலிருந்து தெளிவாகத் தெரிந்தது.

அழுத்தமாய் கவனத்தில் பதிந்தது.

'ஏதாவது ரிப்பேரா?



பத்து நிமிஷமாய் அந்த ஹேர்பின் வளைவிலேயே நிற்கிறது?

யாருடைய கார்?

இறங்கிப் போய் பார்த்துவிட்டு வரலாமா?'

அவர் யோசித்த -

அந்த விநாடி -

அந்தக் கார் நகர்ந்தது.

'சரியாகிவிட்டதா?'

ஜன்னலை விட்டு அகலாமல் காரைக் கவனித்தார்.

கண்களில் - ஏராளமாய் திடுக்கிட்டார்.

நகர்ந்த அந்தக் கார் சாலையை விட்டு விலகி -

தடுப்புச் சுவரை உடைத்துக்கொண்டு நேராகப் பள்ளத்தில் இறங்கி - ஹெட்லைட் வெளிச்சம் சட்டென்று அணைந்து போக - மலைச் சரிவில் தடதடத்தது.

''என்னாயிற்று?''

ஜன்னல் வழியே எக்கிப் பார்த்தார்.

அந்த வளைவு சலனமில்லாமல் தெரிந்தது.

பதட்டமாய் - ஜன்னலினின்றும் விலகி அறையைவிட்டு வெளியே வந்தார்.

படிகளில் தடதடத்துக் கீழே இறங்கி -

கார் ஷெட்டுக்குள்ளிருந்த காருக்குள் பரவி - ஷெட்டினின்றும் காரை விடுவித்து வெளியே கொண்டுவந்தார்.

இரண்டே நிமிஷத்தில் அந்த ஸ்பாட்டைத் தொட்டார். காரை விட்டு இறங்கினார்.

அந்த வளைவு வெறிச்சோடியிருந்தது.

கார் டயர் பதிவுகள் ரோட்டின் மண் பகுதியில் பளிச்சென்று தெரிந்தது.

உடைந்திருந்த தடுப்புச் சுவர் ஓரமாகப் போய் ஜாக்கிரதை உணர்வோடு அந்தச் சரிவை எட்டிப் பார்த்தார்.

இருட்டு.

கனமான இருட்டு.

'பத்து நிமிஷமாய் நின்றிருந்த கார் எப்படி சரிவில் விழுந்தது.'

'போலீஸுக்கு தகவல் சொல்லிவிடலாம். அதுதான் உத்தமம்.'

திரும்ப காருக்கு வந்தார்.

பங்களாவை நோக்கிக் காரை விரட்டினார்.

காரை போர்டிகோவுக்குக் கொடுத்துவிட்டு - வேகமான நடையில் வீட்டுக்குள் நுழைந்தார்.

ட்ராயிங் அறைக்குள் நுழைந்து டீபாயின்மேல் தவம் பண்ணிக்கொண்டிருந்த டெலிபோனைத் தொட்டு டயலை சுழற்றினார். இரண்டு ரிங் போனதும் மறுமுனையில் ரிஸீவரை யாரோ எடுத்தார்கள்.

''ஹலோ... போலீஸ் ஸ்டேஷன்?''

''எஸ்...''

''ரெஜிதா எஸ்டேட் பங்களாவிலிருந்து பேசறேன்... உங்ககிட்டே ஒரு தகவல் சொல்லணும் ஸார்... ஐந்து நிமிஷத்துக்கு முன்னாடி - இங்கே ஒரு ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சு...''

''ஆக்ஸிடெண்டா?''

''ஆமா... கார் ஒண்ணு சரிவில விழுந்துடுச்சு...''

''எங்கே?''

''ரெஜிதா எஸ்டேட்டுக்கு கொஞ்சம் தள்ளி.''

''நீங்க யாரு?''

''ரெஜிதா எஸ்டேட் ஓனர் லக்ஷ்மிகாந்த்...''

''எஸ்டேட் பங்களாவிலிருந்து பேசறீங்களா?''

''ஆமா...''

''ஒரு பத்து நிமிஷம் இருங்க... வந்துடறோம்...''

அவசரத்தனத்தோடு - ரிஸீவர் மறுமுனையில் சாத்தப்பட -

லக்ஷ்மிகாந்தும் ரிஸீவரைக் கவிழ்த்தார்.

சொன்ன மாதிரியே -

பத்தாவது நிமிஷத்தின் ஆரம்பத்தில், இன்ஸ்பெக்டர் சூர்ய பிரகாஷ் இரண்டு கான்ஸ்டபிள்கள் சகிதமாய் வந்து சேர்ந்தார்.



''வரங்க இன்ஸ்பெக்டர்...''

''நீங்க... மிஸ்டர் லக்ஷ்மிகாந்த்?''

''எஸ் இன்ஸ்பெக்டர்...''

''ஆக்ஸிடெண்ட் ஸ்பாட் எது?''

''இன்னும் ரெண்டு பெண்ட் கீழே போகணும்...?''

''ப்ளீஸ்... வாங்க... அந்த இடத்தைக் காட்டுங்க...''

கான்ஸ்டபிள்கள் ஜீப்பின் பின்பக்கம் நிறைய - இன்ஸ்பெக்டரும் லக்ஷ்மிகாந்தும் முன் சீட்டுக்கு வந்தார்கள்.

ஜீப் நகர்ந்து ஐந்து நிமிஷ பயணத்தை மேற்கொண்டு அந்த வளைவு அருகே நின்றது.'

ஜீப் நிற்கிற போதே - அதன் பீறிட்ட ஹெட்லைட் வெளிச்சத்தில் -

அந்த தடுப்புச் சுவர் உடைப்பை சூர்யபிரகாஷ் கவனித்தார்.

ஜீப்பினின்றும் குதித்து - பரவினார்கள்.

லக்ஷ்மிகாந்த் சொன்னார்.

''இந்த இடத்துலதான் இன்ஸ்பெக்டர்...''

''நீங்க எப்படி பார்த்தீங்க?''

''பங்களா மாடி ரூம் ஜன்னலிலிருந்து பார்த்தா இந்த பெண்ட் நல்லா தெரியும் இன்ஸ்பெக்டர்...''

அந்த இடத்திலிருந்து அவர் வீட்டு ஜன்னலைக் காட்டினார்.

''மாருதி கார் நம்பர் கூட பின்பக்க லைட் வெளிச்சத்துல லேசா தெரிஞ்சது...''

''என்ன நம்பர்?''

''TDV 4444. நம்பர் ஒரே மாதிரி இருந்ததால சுலபமா மனசில் பதிஞ்சிடுச்சி இன்ஸ்பெக்டர்...''

''நீங்க பார்க்கப் பார்க்கவே சரிவுல விழுந்துடுச்சா...''

''ஆமா... ஒரு பத்து நிமிஷம் இங்கேயே நின்னுட்டிருந்தது. ஏதோ ரிப்பேர் ஆகி நிற்குதோன்னு நினைச்சேன். பிறகு ஸ்டார்ட் ஆகி நகர்ந்தது. பார்த்திட்டிருக்கிறப்பவே - கொஞ்சம்கூட எதிர்ப்பார்க்காத ஒரு செகண்ட்ல கார் ரோலாக

ஆரம்பிச்சுடுச்சு.''

''கார்ல இருந்தவங்களை பார்த்தீங்களா?''

''காருக்குள்ளே ரெண்டு பேர் இருந்த மாதிரி தெரிஞ்சுது...''

இன்ஸ்பெக்டர் சூர்யபிரகாஷ் தலையாட்டிக்கொண்டே நகர்ந்தார்.

சிறிது நேரத்தில் அதிக சக்தி வாய்ந்த ஸ்பாட் விளக்குகள் வரவழைக்கப்பட்டு மலைச் சரிவுக்குள் கற்றை கற்றையாய் ஒளியைப் பாய்ச்சினார்கள்.

ஸ்பாட் லைட் வெளிச்சம் இருட்டைத் தின்றுகொண்டே பாய்ந்தது. தரை கண்ணுக்கு சிக்க மறுத்தது.

பக்கத்தில் நின்றிருந்த கான்ஸ்டபிள் சொன்னார்.

''ஸார் இது மோசமான பெண்ட் ஸார். போன வருஷம் ஒரு டூரிஸ்ட் வேன் இந்த இடத்தில் விழுந்தது. செத்தது எத்தனை பேர்ன்னுகூட தெரியலை. கீழே இறங்கி அந்த இடத்துக்கு போகவே முடியாது...''

# 6

தன்ராஜ் தயக்கமாய் போர்டிகோ படிகளேறினான். கதவு திறந்திருக்க - உள்ளே எட்டிப் பார்த்தான். பெரிய ஹால் தெரிந்தது. செவ்வகமாய் சோபாக்கள் தெரிந்தன. டெலிபோன் மேஜை தெரிந்தது. ஒரு ஃபிஷ் டப் தெரிந்தது.

''ஸார்... ஸார்...''

கூப்பிட்டான்.

குரல் வீட்டுக்குள் போன -

இரண்டாவது நிமிஷம் -

ஒரு பெண் எட்டிப் பார்த்தாள். வேலைக்காரியாய் இருக்க வேண்டும்... சுத்தமாயிருக்க மறுத்திருந்தாள்.

''யார் வேணும்?''

''ஜெயந்த் ஸார் இருக்கார்?''

''ஒரு நிமிஷம் இருங்க...'



அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு உள்ளே போனாள்.

அவள் போன - சிறிது நேரத்தில் -

ஜெயந்த் வெளியே வந்தான்.

குரலை தாழ்த்திக்கொண்டான் ஜெயந்த்.

''போன காரியம் என்னாச்சு?''

தன்ராஜ் புன்னகைத்தான்.

''உங்க பெரியப்பாவுக்கு சொர்க்கத்துக்கு போக விசா வாங்கி அனுப்பிட்டேன் ஸார்...''

ஜெயந்த் மலர்ந்தான்.

''குட்... நாளைக்கு பேப்பர்ல நியூஸ் வந்துடுமா?''

''போலீஸுக்கு தெரிஞ்சா நியூஸ் கண்டிப்பா வந்துடும் ஸார்...''

ஜெயந்த் உள்ளே திரும்பினான்.

''பங்கஜம்...''

கூப்பிட்டதும் -

அந்த வேலைக்காரி வெளிப்பட்டாள்.

''என்னங்கய்யா?''

''ரெண்டு காஃபி வேணும்''

அவள் தலையாட்டிவிட்டு - உள்ளே போனாள்.

தன்ராஜ் கூப்பிட்டான்.

''ஸார்...''

''என்ன தன்ராஜ்?''

''காஃபி இருக்கட்டும் ஸார்...''

அவன் குரல் மாறவே - ஜெயந்த் நிமிர்ந்தான்.

''நான் என்னோட வேலையை முடிச்சாச்சு... எனக்கு பேசின தொகையை குடுத்துட்டீங்கன்னா நான் போயிட்டே இருப்பேன்...''

ஜெயந்த் உதடுகளில் ஒரு விகாரப் புன்னகையைப் படரவிட்டான்.

''உன்னை நான் ஏமாத்திட மாட்டேன் தன்ராஜ். கண்டிப்பா பணம் தர்றேன். இந்த ஆக்சிடென்ட் விவகாரம் செட்டில் ஆகட்டும்... உயில்படி பெரியப்பாவோட சொத்தெல்லாம் என் கைக்கு

வரட்டும்... பேசினதை விட அதிகமாகவே தர்றேன் உனக்கு...''

காஃபி கொண்டு வந்தாள் வேலைக்காரி.

''எடுத்துக்க''

தன்ராஜ் டம்ளரை வாங்கிக்கொண்டான். வேலைக்காரி போகும்வரை காத்துக்கொண்டிருந்துவிட்டு கேட்டான்.

''அப்ப எனக்கு பணம் எப்ப ஸார் கிடைக்கும்...?''

''இன்னும் ரெண்டே வாரம்... போலீஸ் எப்படியும் நாளைக்கு இங்கே வரும்... என்னோட பெரியப்பா ஆக்ஸிடெண்ட்ல செத்திட்டார்ங்கற விபரத்தை சொல்லுவாங்க... நான் ரெண்டு வாரம் சோக வேஷம் போடுவேன். அப்புறம் நேரா வக்கிலைப் பார்த்து செய்யவேண்டியதை செஞ்சா அடுத்த ரெண்டு மூணு நாள்ல சொத்தெல்லாம் என் பேருக்கு மாறிடும். அதுவரைக்கும் பொறுத்துக்க...''

காலியான காஃபி டம்ளரை கீழே வைத்தான் தன்ராஜ்.

''அப்போ ஒரு வாரம் கழிச்சு வர்றேன் ஸார்...''

''ராத்திரி நேரத்துல வா...''

தன்ராஜ் வெளியேறினான்.

அவன் போனதும் -

உடம்பு பூராவும் சந்தோஷம் குதிக்க - அறையை நோக்கி நடந்தான் ஜெயந்த். அறைக்குள் நுழைந்து ஓடிப்போய் ஃபோம் கட்டிலில் குதித்தான். ரிக்கார்டரைத் தட்டி விட்டு பத்து நிமிஷம் போனி எம்மில் நனைந்தான். பதினோராவது நிமிஷத்தின் ஆரம்பத்தில் -

காலிங்பெல் கதறியது -

எழுந்து -

டேப் ரிக்கார்டரை அணைத்துவிட்டு -

அறையை விட்டு ஹாலுக்கு வந்தான். கதவைத் திறந்தான்.

சூர்ய பிரகாஷ் - இரண்டு கான்ஸ்டபிள்கள் சூழ உள்ளே பிரவேசித்தார். கேட்டார்.

''மிஸ்டர் கைலாசத்தோட வீடு இதானே?''



''ஆமா இன்ஸ்பெக்டர். என்ன விஷயம்?''

வேண்டுமென்றே - முகத்தில் குழப்ப ரேகையைத் வழவிட்டுக் கொண்டு கேட்டான் ஜெயந்த்.

சூர்யபிரகாஷ் அவனை ஏறிட்டார்.

''நீங்க அவரோட சன்னா?''

''தம்பி மகன்... என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்?''

''உங்க பேரு?''

''ஜெயந்த்...''

''மிஸ்டர் ஜெயந்த்... ஸாரி டு ஸே திஸ்... உங்களுக்கு ஒரு ஷாக் ந்யூஸ்...''

முகத்தில் குழப்ப சதவீதத்தை அதிகமாக்கிக்கொண்டு சூர்யபிர்காஷை ஏறிட்டான் ஜெயந்த்.

''ஷாக் நியூஸா? என்ன சொல்றீங்க இன்ஸ்பெக்டர்?''

''யெஸ்... மிஸ்டர் கைலாசம் போன கார் ஊட்டி ாட்ரோட்ல ரோலாயிடுச்சு... காரையும் - பாடியையும் ட்க முடியுமான்னு நாளைக்குத்தான் பார்க்க முடியும்.''

ஜெயந்த் ஏராளமாய் அதிர்ச்சி காட்டினான்.

''இ... இன்... ஸ்பெக்... டர்... என்ன சொல்றீங்க...?''

ஜெயந்தின் அதிர்ச்சியைப் பொருட்படுத்தாமல் விசாரணையை ஆரம்பித்தார் சூர்யபிரகாஷ்.

''அவர் எதுக்காக ஊட்டி போனார்ன்னு தெரியுமா?''

''அஃபிஷியலா ஊட்டி போறதா சொல்லிட்டுப் போனார்... எங்கே ஆக்ஸிடென்ட்...? எப்படி... இன்ஸ்பெக்டர்...?''

கேள்விகளை அடுக்கினான். அழ முயற்சித்து தோற்றுப் போனான்.

சூர்யபிரகாஷ் சொன்னார்.

''ஊட்டிக்குப் போற வழியில் ஒரு ஹேர்பின் பெண்டுல தடுப்புச் சுவரை உடைச்சிட்டு அவரோட கார் விழுந்திருக்கு... அது ரொம்பவும் மோசமான பெண்ட் மிஸ்டர் ஜெயந்த்... பாடி, கார் எதையுமே எடுக்க முடியாத சிரமமான மலைச் சரிவு... எஸ்டேட் ஓனர் ஒருத்தர் மட்டும் பார்த்திருக்காட்டி விபத்து நடந்ததே

தெரிஞ்சிருக்காது... அதுவும் அவர் கார் நம்பரை கவனிக்காமலே இருந்திருந்தா... உங்களுக்கு இந்த நியூசைக்கூட சொல்லியிருக்க முடியாது...''

கண்களை சிரமப்பட்டு கலங்க விட்டான் ஜெயந்த்.

சோகமாய் மொசைக் தரையை வெறித்தான்.

''மிஸ்டர் ஜெயந்த், ஸ்டேஷனுக்கு வந்து நீங்க சில பேப்பர்ஸிலெல்லாம் கையெழுத்துப்போட வேண்டி வரும்...''

''இன்ஸ்பெக்டர்... பெரியப்பாவோட பாடியை மீட்க முடியாதா?''

''ஸாரி ஜெயந்த்... அது ரொம்பவும் மோசமான ஸ்பாட்... அங்கே ஆக்ஸிடென்ட் ஆனது துரதிர்ஷ்டம்... ஸ்டேஷனுக்கு வர்றீங்களா?''

தலையாட்டிக்கொண்டே - அவர்களோடு புறப்பட்டான் ஜெயந்த்.

S.KOTHANDABANI, B.A.,B.L.

காம்பௌண்ட் சுவர் சமீபத்தில் வெள்ளையடிக்கப்பட்டு - அதில் சிரத்தையாக - **'இந்தச் சுவரில் விளம்பரம் செய்யவோ போஸ்டர் ஒட்டவோ கூடாது'** என்று எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. அந்த எச்சரிக்கையையும் அலட்சியப்படுத்தி ஒரு அரசியல் கட்சி தன் கட்சி சின்னத்தை வரைந்து ஓட்டு கேட்டிருந்தது.

ஸ்கூட்டரை காம்பௌண்ட் கேட் ஓரமாய் ஸ்டாண்ட் இட்டு நிறுத்திவிட்டு -

கீச்சென்று - கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். குரோட்டன் செடிகள் புஷ்டியாய்த் தெரிய அருகே சின்னதாய் சதுரப் புல்வெளி ஒன்று பசேலென்று மின்னியது.

ஜெயந்த் கதவைத் தொட்டான். திறந்திருந்தது.

மரியாதைக்காக - காலிங்பெல் ஸ்விட்சைத் தேடி அழுத்தினான்.

சத்தம் கேட்டதும் - அடுத்த அறையிலிருந்து வெளிப்பட்டார் கோதண்டபாணி. தொப்பை சேகரித்து



முகத்தை ரோம வளர்ச்சியில்லாமல் - மைதா மாவின் மினுமினுப்போடு சிரத்தையோடு உழுதிருந்தார். கண்கள் தடிமனான பிரேமோடு கண்ணாடியால் போர்த்தப் பட்டிருந்தது. மெலிதான தலைமுடியை சீவி வழுக்கையை மறைத்திருக்க - அது காற்றடித்த போதெல்லாம் மேலே எழும்பி - 'இவர் தலை வழுக்கை' என்று மானத்தை வாங்கிக்கொண்டிருந்தது.

''வாங்க ஜெயந்த்...''

ஜெயந்த்தை உற்சாகமாக வரவேற்றார் லாயர்.

ஜெயந்த் முகத்திற்கு அடர்த்தியான சோகத்தைக் கொடுத்தபடி உள்ளே வந்து உட்கார்ந்தான்.

லாயர் கேட்டார்.

''என்ன ஜெயந்த், ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க...?''

''ஜெயந்த் வேண்டுமென்றே குரல் தழுதழுத்தான்.

''லாயர் ஸார், நாம யாருமே எதிர்பார்க்காத, நினைச்சுக்கூட பார்க்க முடியாத ஒரு நியூஸ் - கொஞ்சம் நேரத்துக்கு முன்னாடி எனக்குக் கிடைச்சுது.''

அவர் குழப்பத்தை முகத்தில் தடவிக்கொண்டு ஜெயந்த்தை ஏறிட்டார்.

''என்ன சொல்றீங்க...?''

ஜெயந்த் விஷயத்தை சுருக்கமாக அவரிடம் விவரித்தான்.

நிஜமாகவே நிறைய அதிர்ந்தார் கோதண்டபாணி.

''நியூஸ் உங்களுக்கு எப்படி கிடைச்சது ஜெயந்த்?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு வந்தார்... ஸ்டேஷன் போய் ஃபார்மாலிடிஸெல்லாம் முடிச்சிட்டு நேரா இங்கே வர்றேன்...''

''என்னால மேட்டரை ஜீரணிக்க முடியலை ஜெயந்த்...''

''எனக்கும் அதே நிலைமைதான் லாயர் ஸார். எனக்கு அப்பாவா அம்மாவா - எல்லாமே அவரா இருந்தார்... இப்படி திடீர்னு...''

பேச முடியாமல் வேண்டுமென்றே சிரமப்பட்டான்

ஜெயந்த்.

லாயர் அரை நிமிஷ நேரம் மௌனமாய் இருந்துவிட்டு பிறகு சொன்னார்:

''பெரியவர் திடீர்னு ரெண்டு நாளைக்கு முன்னாடி இங்கே வந்திருந்தார்...''

ஜெயந்த் நிமிர்ந்தான்.

''பெரியப்பா வந்திருந்தாரா... எதுக்கு?''

''உ... உயிலை மாத்தி எழுதச் சொன்னார்.''

''உயிலை மாத்தி எழுதச் சொன்னாரா?''

''ஆமா...''

- என்ற கோதண்டபாணி லேசான தயக்கத்துக்குப் பின் சொன்னார்.

''உங்க பேருக்கு எழுதி வச்சிருந்த உயிலை மாத்திட்டார்... உங்க நடவடிக்கை சில நாளா சரியில்லையின்னு ஃபீல் பண்ணினார். சொத்து முழுவதையும் ஊர்ல இருக்கிற அநாதை விடுதிகளுக்கும், தர்ம ஸ்தாபனங்களுக்கும் எழுதி வெச்சுட்டார். நான் உங்களுக்கு சாதகமா எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்... அவர் கேட்கவேயில்லை. விடாப்பிடியா உட்கார்ந்து பிடிவாதமா மாத்தி எழுதிட்டார்...''

ஜெயந்த் கோதண்டபாணியை ஸ்தம்பித்த பார்வை பார்த்தான்.

---

சிறந்த பாடகரான
பி.ஜி. வெங்கடேசன்
குடிபோதையிலேயே
மரணமடைந்தார்.



## 7

சந்தியா பார்வையை அதிர்ச்சியில் தொட்டு எடுத்து



ஜெயந்த்தைப் பார்த்தாள்.

''ஜெயந்த்... நீங்க என்ன சொல்றீங்க?''

''அத்தனையும் நிஜம் சந்தியா... அதிர்ச்சியான நிஜம்.''

''இப்ப நாம என்ன பண்றது...? அந்த சொத்து நம்ம கைக்கு கிடைக்க வழியே இல்லையா?''

உதட்டைப் பிதுக்கினான்.

''எப்படிக் கிடைக்கும்? உயிலைத்தான் மாத்தி எழுதிட்டாரே... நம்ம கைக்கு ஒரு பைசா வராது.''

''உங்க பேர்லதான் எழுதி வச்சிருக்குன்னு கன்ஃபர்மா சொன்னீங்க...?''

''நான் அப்படி சொன்னப்ப என் பேர்லதான் எழுதி இருந்தது. திடீர்னு நேத்திக்கு முந்தின நாள் பெரியப்பாவுக்கு மனசு மாறியிருக்கு... யாரோ என்னைப் பத்தி மோசமா சொல்லியிருக்கணும்...''

''யார்?''

''தெரியலை. என்னோட நடவடிக்கை சரியில்லைன்னு ஃபீல் பண்ணியிருக்கார்... உன்னோட சுத்தறது யார் மூலமாவது அவர்க்கு தெரிஞ்சிருக்குமோ என்னவோ!''

இரண்டு பேரும் தாடைக்கு கைகொடுத்து எதிர்புற சுவரை வெறித்தபடி கனமான நிசப்தத்தோடு உட்கார்ந்திருந்த -

அதே விநாடி -

வாசலில் பைக் ஒன்று படபடத்து அணைந்து போனதைத் தொடர்ந்து -

யாரோ வாசலில் நிழலாடினார்கள்.

ஜெயந்த் எட்டிப் பார்த்தான்.

இன்ஸ்பெக்டர் சூர்யபிரகாஷ் உள்ளே வந்துகொண்டிருந்தார்.

சுரத்தில்லாமல் -

எழுந்தான் ஜெயந்த்.

''வாங்க இன்ஸ்பெக்டர்...''

சூர்யபிரகாஷ் உள்ளே வந்தார்.

ஜெயந்த் காட்டின இருக்கையில் ரினார்.

''அந்த மோசமான விபத்து ந்தமா ஒரு என்கொய்ரி பண்ணணும் மிஸ்ட ஜெயந்த்...! உங்களுக்கொண்ணும் ஆட்சேபணை இல்ல ப?''

''கேளுங்க இன்ஸ்பெக்டர்...''

சந்தியாவைத் திரும்பிப் பார்த்தவர் - கேட்டார்.

''இவங்க யாரு?''

''இவங்க சந்தியா. என்னோட வுட் பி.''

சந்தியா கை குவித்தாள்.

''உங்க பெரியப்பாவுக்கு மிஸ் சந்தி வைத் தெரியுமா?''

''தெரியும்... கல்யாணத்தை அடுத் மாசம் நடத்தறதாயிருந்தார். அதுக்குள்ளே...''

அந்தப் பொய்யைச் சொன்னான்.

தான் வந்த விஷயத்துக்குத் தாவினார் யபிரகாஷ்.

''மிஸ்டர் ஜெயந்த்...''

ஜெயந்த் ஏறிட்டான்.

''உங்க பெரியப்பாவுடை பிராப்பர்ட்டீஸ் எல்லாமே அவருக்கப்புறம உங்களுக்குத்தான் சேரணும்ன்னு அவர் உயில் எழு யிருந்தாராமே?''

''எஸ் இன்ஸ்பெக்டர்... ா விபத்துக்கு ரெண்டு நாளைக்கு முன்னாடி உயில மாத்திட்டார்...''

''ஏன் திடீர்னு மாத்தின ?''

''எனக்குத் தெரியலை இன்ஸ்பெக்டர்''

''உங்க நடவடிக்கை சரியாயில்லைன்னு ஃபீல் பண்ணி உயிலை மாத்தியிருக்கிறதா லாயர் கோதண்டபாணி சொன்னார்...''

''என்கிட்டேயும் அப்படித்தான் சொன்னார்...''

''நீங்க ஏதும் உங்க பெரியப்பாகூட மனஸ்தாபம் பண்ணிட்டீங்களா?''



''ந்நோ... இன்ஸ்பெக்டர்... பெரியப்பாவும் நானும் சுமுகமாத்தான் இருந்தோம். எம்மேலே ரொம்பவும் பிரியமா இருந்தார்... திடீர்ன்னு அவர் ஏன் அப்படி உயிலை மாத்தினார்ன்னு எனக்குத் தெரியலை...''

''அவர் ஊட்டி போறதுக்கு முன்னாடியே... உயிலை மாத்தி எழுதிய விபரம் உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது... நேத்தைக்கு பெரியப்பாவுக்கு நடந்த ஆக்சிடெண்டை பத்தி லாயர்கிட்டே சொல்றதுக்காக போயிருந்தேன்... அப்பத்தான் எனக்கே விஷயம் தெரியும்...''

சூர்யபிரகாஷ் ஜெயந்த்தையே சில விநாடிகள் பார்த்தபடி - மோவாயை வருடினார்.

பின் -

''ஜெயந்த்...''

ஜெயந்த் நிமிர்ந்தான்.

''நீங்க விபத்து நடந்த அன்னிக்கு எங்கே இருந்தீங்க...?''

''இன்ஸ்பெக்டர்...? ஏன் இப்படி கேக்கறீங்க? அது... ப்யூர்லி ஆக்சிடென்ட்தானே?''

''ஆரம்பத்தில அப்படித்தான் நினைச்சிட்டிருந்தோம். ஆனா இப்போ மர்டரா இருக்குமோன்னு சந்தேகம் அரும்பியிருக்கு. சந்தேகத்துக்குக் காரணம் அவர் கார் ஆக்சிடெண்ட் ஆன இடம் அந்த மாதிரி சந்தேகத்துக்கு இடமளிக்கக்கூடியதா இருக்கு...''

''ஸோ, நீங்க என்னை சந்தேகப்படறீங்க?''

சூர்யபிரகாஷ் புன்னகைத்தார்.

''உங்களை மாத்திரம் அல்ல ஜெயந்த்! அவர்கூட பழகுகிற எல்லாரையுமே நாங்க சந்தேகப்படுவோம்... அன்னிக்கு நீங்க எங்கே இருந்தீங்கன்ற விவரம் தந்துட்டீங்கன்னா பரவாயில்லை...''

''இன்ஸ்பெக்டர்... இது அநியாய சந்தேகம்... பெத்த அப்பா மாதிரி இருந்து என்னை வளர்த்த அவரை என்னால் கொலை செய்ய முடியும்ன்னு நீங்க

நினைக்கறீங்களா?''

''இட்ஸ் ஒகே ஜெயந்த். எங்களைப் பொறுத்தவரை உங்க பிணைப்பு எந்த அளவுக்குன்னு தெரியாது... நீங்க அவரோட வளர்ப்பு மகன்... அவர் ப்ராப்பர்டீஸெல்லாம் உங்களைச் சேர இருந்தது... உங்களுக்குத் தெரியாமலே உயில் சமீபத்தில் மாத்தப்பட்டிருக்கு... இதெல்லாம்தான் எங்க பார்வைக்கு வந்தது. அதையெல்லாம் ஒரு காரணமா வெச்சுத்தான் ஸ்டெப்ஸ் எடுத்திட்டிருக்கோம். எங்க சந்தேகங்களுக்கு நீங்க சரியா விளக்கம் கொடுத்திட்டா உங்க மேலிருக்கிற சந்தேகப் புள்ளி தன்னால மறைஞ்சிடுது...''

''பத்தாம் தேதி இந்த ஆக்ஸிடெண்ட் நடந்தது... இல்லையா இன்ஸ்பெக்டர்?''

''எஸ்... பத்தாம் தேதி சாயந்திரம் ஏழரை மணிக்கு...''

''ஒரு நிமிஷம்...''

சொல்லிவிட்டு -

எழுந்து உள்ளே நடந்தான்.

சூர்யபிரகாஷ் சந்தியாவைப் பார்த்தார்.

''உங்க பேரு மிஸ் சந்தியா?''

''எஸ்''

''எங்கேயிருக்கீங்க?''

''அப்பா, அம்மா பக்கத்தில் வில்லேஜ்ல இருக்காங்க... நான் ஞானாம்பாள் லேடீஸ் ஹாஸ்டல்ல தங்கியிருக்கேன்...''

''என்ன பண்ணிட்டிருக்கீங்க...?''

''ஸ்ரீநிவாசா என்ஜினியரிங் வொர்க்ஸ்ல ரிஸப்ஷனிஸ்ட்டாக இருக்கேன்...''

''ஜெயந்த் கூட உங்களுக்கு எப்படி பழக்கம்?''

''அவரோட கம்பெனி சம்பந்தமா எங்க ஆபீஸுக்கு வருவார்... அப்ப பழக்கமாச்சு...''

''எவ்வளவு நாளா பழக்கம்...?''

''ஒரு வருஷமா?''



''உங்க ஃபாதர் மதர்க்கு இந்த விஷயம் தெரியுமா?''

''தெரியாது...''

சந்தியா சொன்ன விநாடி -

உள்ளிருந்து ஜெயந்த் வெளிப்பட்டான்.

கையில் ஒரு கவர்!

நேராக வந்து இருக்கையில் நிரம்பினான்.

''இன்ஸ்பெக்டர்... நீங்க கேட்ட அதே தினம் நானும் சந்தியாவும் சவிதா கார்டன்ஸுக்கு போயிருந்தோம். அங்கே வெச்சு நிறைய போட்டோஸ்கூட எடுத்துக்கிட்டோம்...''

சொல்லியபடியே -

அந்த கவரை அவரிடம் நீட்டினான்.

சூரியபிரகாஷ் சிரித்தார்.

''மிஸ்டர் ஜெயந்த். நீங்க சொல்றது சரி... பத்தாம் தேதிதான் நீங்க அந்த சவிதா கார்டன்ஸ்ல ஃபோட்டோ எடுத்துக்கிட்டீங்கன்னு எப்படி தெரியும்?''

ஜெயந்த் புன்னகைத்தான்.

''உங்க கேள்விக்கான பதிலை இந்த போட்டோக்களே சொல்லும்...''

சூர்யபிரகாஷ் கவரினின்றும் போட்டோக்களை உருவினார்.

ஒவ்வொன்றாய்ப் பார்வையிட்டார்.

ஜெயந்த் தொடர்ந்தான்.

''இட்ஸ் எ மிர்ராகிள் இன்ஸ்பெக்டர்... அங்கே இருக்கற வாட்ச்டவர் ஒண்ணு சில போட்டோவில கவர் ஆகியிருக்கு... டவர்ல நேரம், தேதி, மாசம் எல்லாமே விழுந்திருக்கு...''

சூர்யபிரகாஷ் அந்த போட்டோக்களில் சில நிமிஷம் பார்வையைப் பதித்துவிட்டு நிமிர்ந்தார்.

''மிஸ்டர் ஜெயந்த், இதில் ரெண்டுமூணு போட்டோக்களை நான் எடுத்துட்டுப் போறேன்...''

''வித் ப்ளஷர்...''

சூர்யபிரகாஷ் எழுந்து =

விடைபெற்றுக்கொண்டு வெளியேறினார். அவர் பைக்கில் தடதடத்து காம்பௌண்ட் கேட்டைத் தாண்டினதும் ஜெயந்த் கூப்பிட்டான்.

''சந்தியா...''

''ம்.''

''இப்படியெல்லாம் பிரச்னை வரும்ன்னு தெரிஞ்சுதான் அந்த பத்தாம் தேதி நாம ரெண்டு பேரும் சவீதா கார்டன்ஸ் போனோம்...''

சந்தியா புன்னகைத்தாள்.

''போலீஸை சரிக்கட்டி என்ன பிரயோஜனம் ஜெயந்த். நாம நினைச்சபடி எதுவும் நடக்கலையே... உங்க பெரியப்பா செத்தது என்னைப் பொறுத்தவரைக்கும் க்ரிமினல் வேஸ்ட்...''

''பெரியப்பா இப்படி பண்ணுவார்ன்னு நான் நினைச்சே பார்க்கலை சந்தியா...''

அவன் சொன்ன அதே விநாடி -

வாசலில் -

மறுபடியும் -

நிழலாட்டம்.

திரும்பிப் பார்த்தார்கள்.

தன்ராஜ் நின்றிருந்தான். இருவரின் மனசுக்குள்ளும் கலவரம் கொடி பிடித்தது.

''ஸார்... உள்ளே வரலாமா?''

''வா... வா...''

அவன் உள்ளே வந்ததும் -

''உட்கார் தன்ராஜ்'' என்றான் ஜெயந்த்.

அவன் உட்கார்ந்தான். உட்கார்ந்துகொண்டே கேட்டான்:

''இப்பத்தான் இன்ஸ்பெக்டர் வந்துட்டு போறார் போலிருக்கு ஸார்...''

''ம்... ம்... என்ன விஷயம்?''

''பணம் கொஞ்சம் வேணும் ஸார்...''

'இப்பவேவா?''



''ஆமா ஸார்... நம்ம தோஸ்து ஒருத்தனுக்கு கல்யாணம். பணம் கடனா வேணும்ன்னு கேட்டான். தர்றதா சொல்லிட்டு நேரா இங்கே வந்துட்டேன்... நீங்கதான் காரியத்தை முடிச்சா பணம் தர்றதா சொல்லிஇருக்கீங்களே?''

ஜெயந்த் தயக்கம் மேலிடச் சொன்னான்.

''வந்து... தன்ராஜ்... நானே உன்கிட்டே வந்து சொல்லலாம்ன்னு இருந்தேன்... என் பெரியப்பா திடீர்னு உயிலை மாத்தி எழுதிவச்சிருக்கார்... புது உயில்படி எனக்கு ஒத்தைப் பைசா வராது. நாம மூணு பேரும் இவ்வளவு கஷ்டப்பட்டும் அந்தக் காரியம் அநாவசியமாயிடுச்சு. சொத்து எனக்கு வரும்ங்கிற நம்பிக்கையில் நான் உனக்கு அம்பதாயிரம் தர்றதா சொன்னேன்... ஆனா இந்த நிமிஷம் உனக்கு ஒரு ஆயிரம் ரூபா தர முடியுமான்னு யோசிச்சிட்டிருக்கேன்...''

தன்ராஜ் முகம் மாறி ஜெயந்த்தையும், சந்தியாவையும் பார்த்தான். பார்வையில் ஏகப்பட்ட கலோரியில் அனல் அடித்தது.

# 8

மனசுக்குள் இருக்கும் கலவரத்தை வெளியேகாட்டிக்கொள்ளாமல் சந்தியாவும், ஜெயந்த்தும் தன்ராஜைப் பார்த்துக்கொண்டிருக்க -

அவன் முகப்பிரதேசத்தில் கோபம் கொஞ்சம் கொஞ்சமாய் தத்தியது.

''என்ன ஸார் கதையையே மாத்தறீங்க?''

''நான் நிஜத்தை சொல்றேன் தன்ராஜ்... நீ ரேட்டை கொஞ்சம் குறைச்சுக்க...''

தன்ராஜ் பலமாய்த் தலையசைத்து மறுத்தான்.

''ம்ஹூம்... நான் எதுக்கு ரேட்டைக் குறைக்கணும்...? இதென்ன கத்திரிக்காய் வியாபாரமா ஸார்? என்கிட்டே நீங்க சொன்ன வேலையை கச்சிதமா

முடிச்சுக்குடுத்துட்டேன். இந்த மாதிரி வேலைக்கு அவனவன் லட்சக்கணக்கில் ரேட் கேப்பான் - நான் உங்ககிட்டே நார்மல் ரேட் கேட்டிருக்கேன். இப்ப என்னடான்னா கதையையே மாத்தறீங்க... உங்களுக்கு சொத்து வருதோ போகுதோ... அதப்பத்தி எனக்குக் கவலையில்லை. பேசினபடி எம் பணத்தை வை...''

''நீ கொஞ்சம் யோசிச்சுப் பார்க்கணும் தன்ராஜ்''

''நான் யோசிக்கறதுக்கு எதுவுமே இல்லே ஸார்... என்னை அந்த வேலைக்கு அனுப்பறதுக்கு முன்னாடி சொத்து உங்க கைக்கு வருமா வராதான்னு நீங்கதான் யோசிச்சிருக்கணும்...''

''தன்ராஜ், என்னோட நிலைமையில நீ இருந்து பாரு...''

''என்ன ஸார் சும்மா அதையே திருப்பித் திருப்பி பேசிட்டிருக்கிங்க. எனக்குப் பேசின தொகையை என்னோட உள்ளங்கையில வெச்சுட்டு மத்த வேலையை பாருங்க... என்னைப் பத்தி உங்களுக்குத் தெரியும். வீணா மரியாதையை கெடுத்துகிட்டு அப்புறம் பணத்தை தராதீங்க...''

ஜெயந்த் தன்ராஜை மௌனமாய் முறைத்தான்.

அவன் அந்த முறைப்பை பொருட்படுத்தாமல் பேசினான்:

''நீங்க என்ன செய்வீங்களோ ஏது செய்வீங்களோ எனக்குத் தெரியாது ஸார்... இன்னிக்கு சாயந்தரம் அஞ்சு மணிக்கு என்க்கு பத்தாயிரம் ரூபா வேணும். மீதித் தொகை இன்னும் ஒரு வாரத்தில் என் கைக்கு வரணும். என்கிட்டே பணமில்லை... உயிலை மாத்தி எழுதிட்டார்... இந்த மாதிரி கதையெல்லாம் கேக்க நான் தயாரில்லை... உங்ககிட்டே பணம் இல்லேன்னா ஏதாவது பிசினஸ் பண்ணுங்க... கைவசம் ஒரு அழகான பொண்ணை வெச்சிருக்கிங்களே?''

ஜெயந்த் உஷ்ணமானான்.

''தன்ராஜ், மரியாதையா பேசு!''

தன்ராஜ் சிரித்தான்.



''என்ன ஸார் கத்தறீங்க...?''

''உனக்கு பேசின பணம் தர்றேன்... அதோட பேச்சை நிறுத்திக்க... கண்ட மாதிரியெல்லாம் பேசாதே...''

''அந்த மாதிரி பேசின பின்னாடிதானே பணம் தர்றேன்னு ஒத்துகிட்டீங்க... எப்பவுமே நல்ல தனமா சொன்னா யாருமே கேக்கமாட்டாங்க ஸார்...''

ஜெயந்த் எழுந்தான்.

''உனக்கு இப்ப பத்தாயிரம் ரூபா வேணும், அவ்வளவுதானே?''

''ஆமா...''

''என்கூட வா...''

அவனை அழைத்துக்கொண்டு உள் அறையை நோக்கிப் போனான் ஜெயந்த். தன்ராஜ் அவனைப் பின்தொடர்ந்தான். நான்கைந்து அறைகளைக் கடந்து வெறுமனே சாத்தியிருந்த ஒரு அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே பிரவேசித்தார்கள்.

சுவரோரமாய் எஃகு உடம்போடு இருந்த ஒரு பெரிய லாக்கரின் முன்னால் வந்து நின்றான் ஜெயந்த்.

''தன்ராஜ்...''

''சொல்லு ஸார்... பக்கத்துலதானே நின்னுட்டிருக்கேன்?''

''இந்த லாக்கர்ல நீ கேக்கற அளவுக்கு பணம் இருக்கு... நான் திறந்து பார்த்துத் தோத்துட்டேன்... நீ கொஞ்சம் முயற்சி பண்ணிப்பாரு... முடிஞ்சா எடுத்துக்க...''

தன்ராஜ் பேண்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து அந்த மாஸ்டர் கீ பன்ச்சை வெளியே எடுத்தான்.

எஃகு லாக்கரின் செவ்வக கண்ணுக்குள் - பல ஷேப்புகளில் இருந்த சாவிகளை நுழைத்துப் பார்த்து - கைப் பிடியைத் திருகித் திருகிப் பார்த்தான். சோர்ந்தான்.

''அம்மாடி... சாவியே வளைஞ்சு போயிடும் போலிருக்கு...''

''நிதானமா ட்ரை பண்ணு தன்ராஜ்''

தன்ராஜ் நிமிஷங்களை விரயமாக்கிவிட்டு - வியர்வையோடு நிமிர்ந்தான்.

தன் கையிலிருந்த கி பன்ச்சை தன் பேண்ட் பாக்கெட்டுக்கே திரும்பக் கொடுத்தான்.

''ஏன் தன்ராஜ் முடியலையா?'' - ஜெயந்த் கேட்டான்.

''இதோ பாருங்க ஸார்... இந்த மாதிரி வேலையிலெல்லாம் நான் கத்துகுட்டி. எனக்கு வேண்டியது பணம்... அதை நீங்கதான் தரணும்... அதுக்காக நான் இப்படியெல்லாம் கஷ்டப்படணும்ங்கற அவசியம் எனக்குக் கிடையாது... நீங்க இந்த லாக்கரை உடைப்பீங்களோ திறப்பீங்களோ எனக்குத் தெரியாது... சாயந்தரம் அஞ்சு மணிக்கு எனக்கு பத்தாயிரம் ரூபா வேணும்...''

நெற்றியைக் கீறிக்கொண்டு தன்ராஜைப் பார்த்தபடி கொஞ்ச நேரம் யோசித்தான்.

''என்ன ஸார் யோசிக்கறீங்க?''

''சரி... சாயந்தரம் வா... பணம் தர்றேன்...''

''இங்கே வீட்டுக்கே வரட்டுமா ஸார்?''

''வேண்டாம்... போலீஸ் அடிக்கடி என்கொயரிக்காக இங்கே வர்றாங்க. நீ இங்கே வந்தியானா உன்னை யாரு என்னான்னு விசாரிப்பாங்க... அதெல்லாம் பின்னாடி தொந்திரவு...''

''அப்ப எங்கே வர்றது ஸார்?''

''நார்த் கோயமுத்தூர் சிக்னல்ல நில்லு... நான் வந்து உன்னை பிக்கப் பண்ணிக்கிறேன்...''

''சாயந்தரம் ஒரு அஞ்சு மணிக்கு அங்கே நின்னா போதுமா ஸார்!''

''போதும்...''

''பத்தாயிரம் ரூபா...''

''ஞாபகமிருக்கு...''

அந்த அறையினின்றும் வெளியே வந்தார்கள். ஹாலுக்கு வந்தபோது -

சந்தியா புடவை நுனியைக் கடித்துக்கொண்டிருந்தாள்.



''நான் வர்றேன் ஸார்...! சாயந்தரம் அஞ்சு மணியை மறந்துடாதீங்க...''

ஜெயந்த் தலையசைத்தான்.

தன்ராஜ் வெளியேறியதும் - சந்தியா கவலையோடு கேட்டாள்.

''அவன்கிட்டே என்ன ஜெயந்த் சொன்னீங்க...?''

''உள்ளே லாக்கரைத் திறந்து பணத்தை எடுத்துக்க சொன்னேன்... அந்த லாக்கரை அவனால திறக்க முடியலை...''

''அப்புறம்...?''

''சாயந்தரமா பணம் கொண்டு வந்து தர்றேன்னு சொல்லி அனுப்பியிருக்கேன்...''

''அவன் பத்தாயிரம் ரூபாயா கேட்டான்?''

''ஆமா...''

சந்தியா கண்களை விரித்தாள்.

''சாயந்தரம் அஞ்சு மணிக்குள்ளே அந்த பத்தாயிரம் ரூபாயை எப்படி புரட்டப் போறீங்க...? எந்த தைரியத்தில் அவன்கிட்டே அப்படி சொல்லி அனுப்பினீங்க...?''

ஜெயந்த் சிரித்தான். சொன்னான் மெல்லிய குரலில்.

''என்கிட்டே ஒரு பிஸ்டல் இருக்கிற தைரியத்தில்!''

---

**1478-ல் எட்டாம் ஹென்றியின் மந்திரிகளுள் ஒருவரான ஸர் தாமஸ் மூர், மன்னரின் முதல் திருமணத்தை எதிர்த்ததால் தூக்கிலிடப்பட்டு மரணமடைந்தான்.**



# 9

சாயந்தரம் 4.50 மணி.

ஜெயந்த் ப்ரீஃப்கேஸை டீபாயின் மேல் வைத்தான். எதிரே இருந்த சந்தியாவைப் பார்த்துச் சொன்னான்,

''சந்தியா... அதைக் கொஞ்சம் திறந்து பாரு...''

சந்தியா திறந்து பார்த்தாள்.

உள்ளே மெட்டாலிக் உடம்போடு ஒரு பிஸ்டல்!

''தன்ராஜ் இந்த ப்ரீஃப் கேஸிலிருந்து நான் பணத்தைத்தான் எடுத்துத் தரப்போறதா நினைப்பான். ஆனா நான் பிஸ்டலை எடுத்து அதிலிருக்கிற தோட்டாவைத்தான் அவனுக்குத் தரப் போறேன்னு அவன் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்க்கமாட்டான்...''

சொல்லிக்கொண்டே....

பிஸ்டலைக் கையிலெடுத்து - அதன் வாயைப் பிளக்க வைத்து உள்ளேயிருந்த சேம்பரில் தோட்டாக்களை சரி பார்த்தான்.

திரும்ப பிஸ்டலை மடக்கி அதன் வாயைச் சாத்தி பழைய மாதிரியே ப்ரீஃப்கேஸுக்குள் வைத்தான்.

சந்தியா கேட்டாள்:

''அந்த தன்ராஜை எங்கே கூட்டிட்டு போகப் போறீங்க...?''

''சவீதா கார்டனுக்கு... சாயந்தரம் அஞ்சு மணிக்கு மேலே போனா அந்த இடத்துல ஆள் நடமாட்டமே இருக்காது... காரியத்தை முடிச்சிட்டு விசிலடிச்சுகிட்டே வந்துடலாம்...''

''தன்ராஜ் செத்தா போலீஸுக்கு உங்க மேலே சந்தேகம் வராதே?''

''கண்டிப்பா வராது... எனக்கும் தன்ராஜுக்கும் தொடர்பு இருக்குங்கிற உண்மை உனக்கு மட்டும்தான் தெரியும்... அவன்செத்துப் போனா என்மேலே யார்க்கும் எந்த சந்தேகமும் வரப் போறதில்லை... தன்ராஜ் மோசமான பேர்வழிங்கிறது போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கே தெரியும்... அவனுக்கு ஏராளமான எதிரிங்க இருக்கலாம்... போலீஸோட சந்தேகம் அந்தப் பக்கமாத்தான் இருக்கும். எம் பக்கமா



வராது...''

''நானும் உங்ககூட வரட்டுமா?''

''வேண்டாம் சந்தியா... நான் மட்டும் போறேன்... நீ ஹாஸ்டலுக்குக் கிளம்பு. லாயர் கோதண்டபாணி ஆறு மணிக்கு மேலே இங்கே வர்றதா சொல்லியிருக்கார்...''

''லாயர் எதுக்காக வர்றார்?''

''உயில் வாசகப்படி சொத்துப் பூராவையும் டிரஸ்ட்டுகளுக்கும் - அநாதை விடுதிகளுக்கும் தர்ணுமாம். அதுக்காக பேப்பர் பத்திரங்களோடு என்னைப் பார்க்க வர்றதா சொல்லியிருந்தார். இந்த பங்களா வாசம், கார் சவாரி, ஃப்ரிஜ் வாட்டர் கொஞ்ச நாளைக்குத்தான்... அப்புறம் தெருவுக்கு வந்துட வேண்டியதுதான்...''

கவலையாய் சொல்லிவிட்டு -

ப்ரீஃப்கேஸை எடுத்துக்கொண்டு -

வெளியே வந்தான் ஜெயந்த்.

போர்டிகோவில் நின்றிருந்த காருக்குள் பரவினான்.

ப்ரீஃப்கேஸை தனக்கு அருகாக வைத்துக்கொண்டு - ஸ்டியரிங் பிடித்தான்.

சந்தியாவுக்குக் கையை ஆட்டிக்கொண்டே....

பங்களா காம்பௌண்டை விட்டு வெளியே வந்தான்.

நகர சாலைகளில் - ஒரு பத்து நிமிஷம் சிரமமாய்ப் பயணித்து -

சரியாய் ஐந்து ஐந்துக்கு - .

வடகோவை சிக்னல் அருகே -

மெல்லமாய்க் காரை ஊர்த்தினான் ஜெயந்த்.

முன்புற கண்ணாடி வழியே சிக்னலின் நாலா பக்கங்களிலும் ஜனங்களைப் பார்த்து அந்தக் கும்பலுக்குள்ளே தன்ராஜைத் தேடினான்.

பஸ் நிற்கும் அந்த ஷெல்டரிலிருந்து கொஞ்சம் தள்ளியிருந்த எலக்ட்ரிக் போஸ்ட் அருகே தன்ராஜ் பீடி புகையும் வாயோடு தெரிந்தான். ஜெயந்த்தையும் காரையும் பார்த்ததும் தன் கறுப்பு முகத்தில் பிரகாசம்

காட்டினான்.

ஜெயந்த் காரை ரோட்டோரமாய் கொண்டுபோய் நிறுத்த - தன்ராஜ் உரிமையோடு -

முன் கதவைத் திறந்துகொண்டு -

ஜெயந்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான்.

கார் விருட்டென்று பறந்தது.

சொற்ப நிமிஷங்களில் நகர எல்லையைக் கடந்து ஹைவேஸ் ரோட்டில் பீறிட்டது.

''சொன்ன மாதிரியே அஞ்சு மணிக்கே வந்துட்டீங்க ஸார்...''

அவனுக்கு பதில் சொல்லாமல் ஸ்டியரிங்கைக் கையாண்டான் ஜெயந்த்,

''என்ன ஸார் ஒண்ணும் பேசமாட்டேங்கறீங்க...?''

''என்ன பேசறது? அதான் காலையிலேயே பேசிட்டோமே...?''

தன்ராஜ் சிரித்தான்.

''எம்மேலே உங்களுக்குக் கோபம் போலிருக்கு. நாம இப்போ எங்கே போறோம் ஸார்?''

''பேசாமே வா...''

கார் பத்து நிமிஷங்களை விழுங்கி - ஏழெட்டு கிலோ மீட்டர்களையும் விழுங்கியபின் - சட்டென்று காரின் வேகம் குறைந்தது.

''என்னாச்சு ஸார்?''

தன்ராஜ் கேட்கக் கேட்க -

காரின் வேகம் முழுசுமாய்க் குறைந்து -

ஹம்ம்மென்று ஓடி -

அணைந்து போனது.

ஜெயந்த் புருவம் சுருக்கி -

இக்னீஷியனை உசுப்பிப் பார்த்தான்.

ம்ஹூம்.

கார் கர்ர்ரென்று தொண்டையைக் கமறியது. புகையை அடர்த்தியாய் வெளியிட்டது.

''என்னாச்சு ஸார்?''



மறுபடியும் கேட்டான் தன்ராஜ்.

''தெரியலை. பார்க்கணும்...''

சொல்லிக்கொண்டே காரினின்றும் இறங்கினான் ஜெயந்த்.

முன்பக்கமாய்ப் போய் பானட்டின் தலையைத் தூக்கி நிறுத்தினான்.

உள்ளே குனிந்து அடைத்துக்கொண்டிருந்த பெட்ரோல் ட்யூபை சரி செய்தான். காட்டன் வேஸ்டால் கையைத் துடைத்துக்கொண்டு - பானட்டைக் கவிழ்த்துவிட்டு -

திரும்பி வந்து -

டிரைவிங் இருக்கையில் நிரம்பினான்.

ஸ்டார்ட் செய்து பார்த்தான்.

இக்னீஷியனின் முதல் உசுப்பலில் கார் உயிர் பிடித்துக்கொண்டது.

''என்ன ரிப்பேர் ஸார்?''

''பெட்ரோல் ட்யூப்ல டஸ்ட் அடைச்சிட்டிருந்தது...''

''சரி இப்போ நாம எங்கே ஸார் போறோம்?''

''சவீதா கார்டன்...''

''ஏன் ஸார்... பத்தாயிரம் ரூபா பணத்தைத் தர்றதுக்கு அங்கே போகணுமா?''

''உன்கூட கொஞ்சம் பேசணும்...''

''இனியும் என்ன ஸார் பேசணும்?''

''வா... சொல்றேன்...''

ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு -

கார் சவீதா கார்டனுக்குள் பிரவேசித்தது.

பசேலென்ற புல்வெளிக்கு மத்தியில் நேர் வகிடு எடுத்த மாதிரி ஓடியிருந்த - பாதையைப் பற்றிக்கொண்டு ஓடியது கார். கார்டனின் ஒதுக்குப் புறமான இடத்துக்கு வந்ததும் கார் நின்றது.

ஒரு மசமசப்பான இருட்டுக்குள் அந்த பிராந்தியம் முழுவதுமே விழ ஆயத்தமாகிக்கொண்டிருந்தது.

காரின் கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கினான்

ஜெயந்த்.

''தன்ராஜ் இறங்கு...''

''உங்க நடவடிக்கையே ஆச்சர்யமா இருக்கு ஸார். பணத்தை இங்கே கொண்டு வந்துதான் தரணுமா?''

''உன்னோட நல்லதுக்காகத்தான் தன்ராஜ்... போலீஸ் பயம் இல்லாமே சாவகாசமா உக்காந்து நீ பணத்தை எண்ணிட்டுப் போலாம் பாரு...''

தன்ராஜ் மறுபக்கமாய் இறங்கி வர -

ஜெயந்த் சுற்றும் முற்றும் ஒரு தடவை பார்த்துக்கொண்டான்: கண்ணுக்கெட்டின தூரம் வரை எந்த அசைவும் இல்லை.

ப்ரீஃப்கேஸைத் திறந்துகொண்டே ஜெயந்த் சொன்னான்.

''ஸாரி... தன்ராஜ்... நான் உனக்கு பணம் கொடுக்கறதுக்காக இங்கே கூட்டிட்டு வந்ததா நீ இந்த வினாடி வரைக்கும் நினைச்சிட்டிருந்திருப்பே...''

தன்ராஜ் நிமிர -

ஜெயந்த் தொடர்ந்தான் - புன்னகையோடு.

''இப்ப நீ அந்த நினைப்பை மாத்திக்கலாம் தன்ராஜ். நான் உனக்கு பணம் தர்றதுக்கு பதிலா... உன்னை எங்க பெரியப்பா போய்ச் சேர்ந்த இடத்துக்கே அனுப்பி வெக்கப்போறேன்... நீ அவர்கிட்டேயே போய் பணத்தை வாங்கிக்க...''

சொல்லிக்கொண்டே -

ப்ரீஃப்கேஸைத் திறந்த ஜெயந்த் - பிஸ்டலை எடுப்பதற்காக உள்ளே கையை நுழைத்தான்.

அதிர்ந்தான்.

ப்ரீஃப்கேஸ் பூராவும் காற்று உட்கார்ந்திருந்தது.

தன்ராஜ் தன் பிடிப்புகை ஏறிய உதடுகளில் புன்னகைத்தான்...

''ஸாரி... ஸார்... என்னோட கையைக் கொஞ்சம் பார்க்கறீங்களா?''

ஜெயந்த் அதிர்வோடு நிமிர -



தன்ராஜின் கையில் அந்த மெட்டாலிக் பிஸ்டல் விசுவாசமாய் உட்கார்ந்திருந்தது.

# 10

''த... த... தன்ராஜ்'' தொண்டைக்குழி எவரெஸ்டாய் உறைந்து போயிற்று.

அதிர்ச்சியும் பயமுமாய் அவனைப் பார்த்தான் ஜெயந்த். நிமிஷத்தில் உடம்பு வியர்வையை வாங்கியிருந்தது.

தன்ராஜ் தன் உதட்டிலிருந்து இன்னும் புன்னகையை விலக்காமல் இருந்தான்.

''என்ன ஸார்... ப்ரீஃப்கேஸ்ல பிஸ்டலைத் தேடறீங்களா...? தேடுங்க... நல்லா தேடுங்க...''

''அ... நீ... த... பிஸ்டல்?''

''எப்படி என் கைக்கு வந்ததுன்னு கேக்கறீங்களா?''

முள் விழுங்குகிற மாதிரி எச்சில் விழுங்கித் தலையசைத்தான் ஜெயந்த்.

''ஸார்... எனக்கு பணக்கார பசங்கமேல என்னிக்குமே நம்பிக்கை இருந்ததில்லை. ஏதாவது ஒரு வழியில அயோக்கியத்தனம் பண்ணுவாங்கன்னு தெரியும். ஒருவேளை நீங்க ப்ரீஃப்கேஸ்ல பணத்துக்கு பதிலா பிஸ்டலை வச்சிருப்பீங்களோன்னு ஒரு சந்தேகம் மனசில் இருந்தது. நீங்க காரை ரிப்பேர் பண்ண கீழே இறங்கிப் போனப்போ... ப்ரீஃப்கேஸைத் திறந்து பார்த்தேன்... நான் நினைச்சமாதிரியே உள்ளே பிஸ்டல்!''

''அ... அ... அது... தன்ராஜ்...''

''உங்க பெரியப்பா போன இடத்துக்கு இப்ப நான் உங்களை அனுப்பி வைக்கட்டுமா ஸார்...''

அவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே -

ஒரு சின்னப் பாய்ச்சல் நிகழ்த்திய ஜெயந்த் -

விநாடியில் மிகச் சிறிய அவகாசத்திற்குள் -

தன்ராஜின் கையிலிருந்த பிஸ்டலைத் தட்டிவிட்டான்.

பிஸ்டல் தெறித்து - காற்றில் நீந்தி -

கொஞ்சம் தொலைவில் விழ -

குபீரென்று பாய்ந்து பிஸ்டலைப் பொறுக்கிக்கொண்டான் ஜெயந்த்.

தன்ராஜை நோக்கி பிஸ்டலின் கண்ணைத் திருப்பினான்.

''என்ன தன்ராஜ் சொன்னே? பணக்காரப் பசங்க அயோக்கியத்தனம் பண்ணுவாங்களா? நான் இப்போ பண்ணினதுக்கு பேரு அயோக்கியத்தனமில்லை தன்ராஜ்... அதி புத்திசாலித்தனம்...''

தன்ராஜிடம் இன்னும் புன்னகை மறையாமலிருந்தது.

''பிஸ்டலை தட்டிவிட்ட நீங்க புத்திசாலின்னா... அதிலிருந்து தோட்டாக்களை எல்லாம் எடுத்து வச்சிருக்கற நான் அதி புத்திசாலி இல்லையா ஸார்!''

சொன்ன தன்ராஜ் -

பாக்கெட்டிலிருந்து எடுத்த தோட்டாக்களை -

உள்ளங்கையில் உருட்டிக் காண்பித்தான். தோட்டாக்கள் அவனுடைய உள்ளங்கையில் சோம்பல் முறித்தன.

''ஸார்... இந்த தன்ராஜ் மத்தவங்களைத்தான் கொலை பண்ணுவான்... இன்னொருத்தன் கையில கொலையாக மாட்டான்... ஏன்னா என்னோட ஜாதகமே அப்படித்தான்... பத்தாயிரத்தை தர்றீங்களா?''

''தன்... ராஜ்...''

''என்ன ஸார்...''

''என் கையில் பணமில்லை...''

''எனக்கு பணம் வேணுமே...? ஏன் ஸார்... கார் வெச்சிருக்கீங்க... பங்களாவில இருக்கீங்க... ஒரு பத்தாயிரம் ரூபாயை உங்களாலே புரட்ட முடியலை...?''

''தன்ராஜ்... பெரியப்பாவோட உயில்படி அவரோட எல்லா சொத்தும் பொதுச் சொத்தாயிடுச்சு...''

''இந்தக் கதையெல்லாம் என்கிட்டே வேண்டாம் ஸார்.... நாளைக்கு சாயந்தரம் வரைக்கும் உங்களுக்கு டயம் தர்றேன்... நாளைக்கு சாயந்தரம் பணம் வரலைன்னா - நீங்க கல்யாணம் பண்ணிக்கப் போற



அந்தப் பொண்ணு சந்தியாவை - ரெண்டு ராத்திரிக்கு - வாடகைக்குக் கேட்பேன்...''

அதிர்ந்து போய் -

நிமிர்ந்தான் ஜெயந்த்.

---

**விண்வெளியில் முதலில் நடந்த எட்வர்டு ஒயிட் மற்றும் வர்ஜில் கிரிசன், ரோகர் ஸாஃபி ஆகியோர் சென்ற முதல் அப்போலோ விண்கலம் விபத்தில் சிக்கியது. மூன்று வீரர்களும் (1967இல்) மரணமடைந்தார்.**



# 11

கூட்டமில்லாத ஒரு ரெஸ்டாரெண்டின் மேஜைக்கு எதிரும் புதிருமாய் உட்கார்ந்திருந்தார்கள் ஜெயந்த்தும், சந்தியாவும்.

எல்லாவற்றையும் கனமான கவலையோடு கேட்டாள் சந்தியா. தாடையை வலது கை தாங்கியிருந்தது.

''இப்ப என்ன பண்றது ஜெயந்த்...?''

''அதான் நானும் யோசிக்கிறேன்... சாயந்தரம் அந்த ராஸ்கல் வந்துடுவான்...''

இருவருக்கும் மத்தியில் சிறிது நேரம் மௌனம் நிலவியது.

மௌனத்தைக் கலைத்தான் ஜெயந்த்.

''சந்தியா...''

''என்னங்க...''

''நான் ஒண்ணு சொன்னா நீ கோபிச்சுக்கமாட்டியே?''

''இல்லே... சொல்லுங்க...''

''உங்கிட்டே இப்போ எவ்வளவு சவரன் நகை இருக்கும்?''

''பதினைஞ்சு சவரன்...''

தயக்கமாய் சொன்னான்.

''அந்த நகையை அடகு வச்சு பணம் வாங்கி அந்த ராஸ்கலோட வாயை அடைக்கிறதுதான் இப்போதைக்கு இருக்கற ஒரே வழி...''

''ஜெயந்த்?''

''ஆமா சந்தியா... இல்லைன்னா அவன் உன்னைப் பத்தி மோசமா பேசுவான்... ஆபாசமா எதையாவது சொல்லுவான்... என்னாலே அதையெல்லாம் கேட்டுட்டிருக்க முடியாது...''

''இப்போ நான் என்ன பண்ணனும் ஜெயந்த்!''

''உன்னோட ஹாஸ்டலுக்குப் போய்... நீ அந்த நகைகளை எடுத்துட்டு வரணும்... எனக்குத் தெரிஞ்ச சேட் ஒருத்தன்கிட்டே அந்த நகைகளை அடகு வெச்சு ரூபாய் பத்தாயிரத்தை வாங்கணும்...''

சந்தியா கவலையோடு தலையசைத்தாள்.

''சரிங்க ஜெயந்த். இப்ப அந்த பத்தாயிரத்துக்கு நகையை அடகு வெக்கறோம்... மீதி நாற்பதாயிரத்துக்கு...? அந்த நாற்பதாயிரத்தை அவன் கேக்கறப்போ என்ன செய்வீங்க? நகையை வித்துரலாம்னு சொல்வீங்களா?''

''கண்டிப்பா உன்னோட நகையை விக்க மாட்டேன்... அதுக்குள்ளே நான் வேற ஏற்பாட்டை பண்ணிடுவேன்...''

சொல்லிக்கொண்டே -

எழுந்தான்.

''நட சந்தியா, உன்னோட ஹாஸ்டலுக்கு போலாம்...''

சந்தியாவும் எழுந்தாள்.

வெளியே வந்து -



ஸ்கூட்டரில் பரவிக்கொண்டு -

ஹாஸ்டலை நோக்கிப் பயணப்பட்டார்கள்.

சில நிமிஷங்களில் ஹாஸ்டல் வாசலில் இருந்தார்கள்.

''நீ போய் நகைகளை எடுத்துட்டு வா சந்தியா... நான் தெரு மூலையில் ஸ்கூட்டரோடு வெயிட் பண்றேன்...''

சந்தியா தலையாட்டிக்கொண்டே ஹாஸ்டலுக்குள் நுழைந்தாள். சரியாய் ஐந்து நிமிஷம் கழித்து -

திரும்பி வந்தாள்.

கையிலிருந்த ரெக்ஸின் பேக்கை தோளில் மாட்டிக்கொண்டு ஸ்கூட்டர் பில்லியனில் நிரம்பினாள். ஜெயந்த் கேட்டான்.

''எவ்வளவு தேறும் சந்தியா?''

''பதினஞ்சு சவரன் தேறும்... போதுமா?''

''ம்... போதும். உனக்கொண்ணும் நகைகளைத் தர்றதுல மனக் கஷ்டமில்லையே சந்தியா?''

''நாம இப்போ இருக்கிற நிலைமையில கஷ்டங்களைப் பகிர்ந்துக்கிறதுதான் சந்தோஷமான விஷயம் ஜெயந்த்...''

''தேங்க்ஸ் சந்தியா...''

''தேங்க்ஸ் இருக்கட்டும் - நகைகளை யார்கிட்டே அடகு வெச்சு பணம் வாங்கப் போறீங்க...''

''பஜார்ல எனக்குத் தெரிஞ்ச சேட் ஒருத்தர் இருக்கார். அவர்கிட்டே போயிடுவோம்...''

சொல்லிக்கொண்டே ஸ்கூட்டரின் இடுப்பை உதைத்தான். அது உயிர் பிடித்ததும் நகர்த்தி - சரியாய் ஆறு நிமிஷங்களை செலவழித்து - அந்த சேட் கடையின் முன்னால் ஸ்கூட்டரை அணைத்தான்.

வெள்ளை வெளேரென்ற மெத்தையில் சாய்மானமாய் உட்கார்ந்திருந்தார் சேட் பஜன்லால். மஸிலின் ஜிப்பாவுக்குள் பதுங்கியிருந்த அமோக தொப்பையை மோதிரங்கள் டாலடிக்கும் வலது கையால் தட்விக்கொண்டிருந்தார். முகம் டால்டா நிறத்தில்

எண்ணெய் பிசுபிசுப்போடு தெரிந்தது. உடம்பின் நிறைய இடங்களில் நிறைய அநாவசியமான சதைகள்.

ஜெயந்த்தைப் பார்த்ததும் -

ஒரு மலர்ச்சிக்குப் போனார்.

''ஆவ்... ஜெயந்த் பேட்டா...''

ஜெயந்த், சந்தியாவின் கையிலிருந்து பேக்கை வாங்கிக்கொண்டு -

''சேட் கொஞ்சம் உள்ளே வாங்க...'' என்றான்.

இரண்டு பேரும் உள்ளே போனார்கள்.

சில நிமிஷங்களில் -

திரும்பி வந்தான் ஜெயந்த்.

''ஜெயந்த்...?''

- காத்திருந்த சந்தியா அவனை ஏறிட்டாள்.

''வா... போகலாம்... பணம் வாங்கிட்டேன்...''

''எவ்வளவு ஜெயந்த்...?''

''பத்தாயிரம்...?''

ஸ்கூட்டரைப் பார்த்து நடக்க நடக்க -

சந்தியா அடர்த்தியான கவலைக் குரலில் மெலிதாய்க் கேட்டாள்.

''ஜெயந்த்... இந்த பணத்தை வாங்கிக்க அவனை எங்கே வரச் சொல்லப் போறீங்க...?''

''அவனை எங்கேயும் வரச் சொல்லப் போறதில்லை...''

சந்தியா ஒரு அதிர்வு வாங்கி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''என்ன சொல்றீங்க...?''

''அவனுக்கு பணத்தை தரணும்னுதான் போன நிமிஷம் வரைக்கும் நினைச்சிட்டிருந்தேன்... பட், இப்ப நினைப்பை மாத்திட்டேன் சந்தியா.''

''நினைப்பை மாத்திகிட்டீங்களா...?''

''சந்தியா, இந்த பத்தாயிரம் ரூபாயைக் கொண்டு போய்க் கொடுத்தா அதோடு அந்த ராஸ்கல் நிறுத்திக்க



மாட்டான்... மறுபடியும் மீதி பணத்தை கேப்பான்.. அதை நம்மால தரமுடியலைன்னா மறபடியும் உன்னைச் சீண்டுவான்... அவனுக்கும் எனக்கும் தகராறு வரும். அவன் போலீஸுக்கு போறேன்னு சொல்லுவான்... இனிமே அவனால நமக்கு கஷ்டம்தான் சந்தியா...''

சந்தியா குழப்பத்தோடு அவனைப் பார்த்தாள்.

''சரி... ஜெயந்த்... இப்ப என்ன செய்யலாம்னு சொல்றீங்க...?''

''அந்த ராஸ்கலை சமாளிக்கணும்ன்னா நமக்கு இருக்கிற ஒரே வழி... அவனோட கண்கள்ல படாமே கொஞ்ச நாளைக்கு மறைவா இருக்கணும்...''

சந்தியா கண்களை விரித்து நிமிர்ந்தாள்.

''மறைவா இருக்கிறதுன்னா ஊரைவிட்டுப் போறதா...?''

''ம்...!''

''எந்த ஊருக்குப் போறது...?''

''ரொம்ப தூரம் போயிடணும்...''

''அதான் எங்கே...?''

''பம்பாய்ப் பக்கமா போயிடலாம்... போயிட்டு ஒரு மாசம் கழிச்சு மெதுவா ஊருக்குத் திரும்பி வரலாம். இல்லே... பம்பாய்ல எனக்கு ஒரு நல்ல வேலை கிடைச்சா அங்கேயே செட்டில் ஆயிடலாம்... யோசிக்க அவகாசமே இல்லை சந்தியா... சாயந்தரம் தன்ராஜ் வந்துடுவான்... அதுக்குள்ளே நாம புறப்பட்டுப் போயாகணும்... இப்ப மணி எவ்வளவு...?''

வாட்சைப் பார்ததாள் சந்தியா.

''ரெண்டு பத்து''

''சாயந்தரம் நாலு மணிக்கு பம்பாய் போற ஜெயந்தி ஜனதா எக்ஸ்பிரஸ் இருக்கு... அதுல புறப்பட்டுப் போயிடலாம்...''

''வேற வழியில்லையா ஜெயந்த்...''

''நான் நல்லா யோசிச்சு பார்த்துட்டேன் சந்தியா.

பெரியப்பாவோட சொத்துல ஒரு பைசாவும் எனக்கு கிடைக்கப் போறதில்லை. நாம பேசினபடி அந்த தன்ராஜ்க்கு பணத்தையும் கொடுக்க முடியாது. பணம் தராமே இருந்தா அவன் உன்னையும் என்னையும் சும்மா விடமாட்டான். உன்னைச் சீண்டுவான்... முடியலைன்னா போலீஸ்"க்கு தகவல் கொடுத்துட்டு அவன் தலைமறைவாயிடுவான்... எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் நமக்கு ஆபத்துதான்... பேசாமே யார் கண்ணிலும் படாமே ஊரைவிட்டுப் போயிடறது பெட்டர்...''

பேசிக்கொண்டே ஸ்கூட்டரை ரயில்வே ஸ்டேஷனை நோக்கித் திரும்பினான் ஜெயந்த்.

''டிக்கெட் எடுத்துகிட்டு அப்புறமா வீட்டுக்குப் போகலாம்...''

ஸ்டேஷன் வாசலில் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு -

உள்ளே போனார்கள்.

## 12

சரியாய்ப் பதினைந்து நிமிஷம் கழித்து -

கையில் டிக்கெட்டுகளோடு வெளியே வந்தார்கள் இருவரும்.

''ஜெயந்த்...''

''ம்?''

''என்னை ஹாஸ்டல்ல கொண்டுபோய் விட்டுட்டு நீங்க பங்களாவுக்குப் போங்க... நான் ஸ்டேஷனுக்கு எத்தனை மணிக்கு வரணும்?''

''ரெண்டு பேரும் ஸ்டேஷனிலேயே மீட் பண்ணிக்கலாம் சந்தியா... மூணு முப்பதுக்கு ஹிக்கின்பாதம்ஸ் புக் ஸ்டால் முன்னாடி நிக்கறேன்... நீயும் அங்கேயே வந்துடு. நான் எங்க லாயரைப் போய்ப் பார்த்து பங்களா, கார், ஸ்கூட்டரை ஹேண்ட் ஓவர் பண்ணிட்டு - இந்த ஊர்ல இருக்கப் பிடிக்கலைன்னு



சொல்லிட்டு வந்துடறேன். சொல்லாமே கொள்ளாமே கிளம்பிப் போனா அவர்களுக்கும் சந்தேகம் வரும்...''

''சரி...''

தலையாட்டினாள் சந்தியா.

ஸ்கூட்டர் ஹாஸ்டலை நோக்கி சீறியது.

இரண்டரை மணிக்கு அவளை ஹாஸ்டலின் முன்னால் உதிர்த்துவிட்டு -

பங்களாவை நோக்கி ஸ்கூட்டரை திருப்பினான்.

பங்களாவுக்குள் ஸ்கூட்டரை நுழைத்தபோது -

உள்ளே -

போர்டிகோவில் -

ஒரு கார் நிற்பது தெரிய -

புருவச் சுருக்கலோடு ஸ்கூட்டரைப் பார்க் செய்துவிட்டு போர்டிகோவைத் தொட்டான்.

காரைப் பார்த்தான்.

லாயர் கோதண்டபாணியின் கார்.

ஹாலில் இருந்த சோபாவில் -

மோவாயைத் தாங்கிக் காத்திருந்தார்.

''வாங்க லாயர் ஸார்...''

முகத்துக்குப் புன்னகையைக் கொண்டு வந்து வரவேற்றான்.

கோதண்டபாணி பதிலுக்குப் புன்னகைத்தார்.

''ரொம்ப நேரமா காத்திட்டிருக்கீங்களா ஸார்...?''

''ஒரு பத்து நிமிஷமா!''

அவருக்கு எதிர் சோபாவில் நிறைந்தான்.

''என்ன விஷயம்?''

''உங்க பெரியப்பா உயில் சம்பந்தமா ரெஜிஸ்டாரை வைத்து பேசிட்டேன் ஜெயந்த். இந்த உயிலை மாத்தி எழுதினதுல உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையே...?''

''இல்லை...''

''அப்படீன்னா... இந்த ஃபாரத்துல ஒரு கையெழுத்தை போடுங்க...''

''கையெழுத்துதானே? போடறேன் குடுங்க...''

''பேப்பர்ஸ் பூராவும் ஆஃபீஸ்ல வெச்சிருக்கேன்... நீங்க அங்கேயே வந்து கையெழுத்தைப் போட்டா தேவலை...''

''லாயர் ஸார், நானே உங்களைப் பார்க்க வரணும்ன்னு நினைச்சுட்டிருந்தேன்...''

''என்னையா...? எதுக்கு?''

''எம்மேல நம்பிக்கையில்லாமே பெரியப்பா உயிலை மாத்தி எழுதி வெச்சுட்டார்... அந்த அதிர்ச்சியை என்னால தாங்கிக்கவே முடியலை... இந்த ஊர்ல இருக்கவே எனக்குப் பிடிக்கலை... கொஞ்ச நாளைக்கு வெளியூர் ஏதாவது போயிட்டு வரலாம்னு இருக்கேன்...''

''எந்த ஊருக்குப் போறீங்க...''

''இன்னும் முடிவு பண்ணலை...''

லாயர் சிறிது நேரம் மௌனித்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னார்.

''பெரியப்பா உங்க விஷயத்துல கொஞ்சம் தாராளமா நடந்திருக்கலாம்... ஏன்தான் உயிலை இப்படி மாத்தி எழுதி வெச்சாரோ தெரியலை... நடவடிக்கை சரியில்லைன்னு சொன்னா உங்களைக் கூப்பிட்டு புத்திமதி சொல்லியிருக்கலாம்...!''

ஜெயந்த் கசப்பாய் சிரித்தான்.

''நடந்துபோனதைப் பத்தி இனிமே பேசி பிரயோஜனம் என்ன லாயர் ஸார்... ஆஃபீஸ் நிர்வாகத்திலும் எனக்கு எந்தவிதமான உரிமை இல்லை... சொத்திலும் எனக்கு பாத்தியதையில்லை. அப்புறம் நான் எதுக்காக இந்த ஊர்ல இருக்கணும் ஸார்... இந்த நிமிஷத்திலிருந்து பங்களாவையும், காரையும் - ஸ்கூட்டரையும் உங்க பொறுப்பில் விடறேன் ஸார்...''

லாயர் சிறிது நேரம் அவனையே பார்த்துக்கொண்டிருந்துவிட்டு -

''சரி...'' என்று சொல்லித் தலையாட்டினார்.

மேலும் ஒரு ஐந்து நிமிஷம் பேசிக்கொண்டிருந்துவிட்டு புறப்பட்டார்.



1986ல் அமெரிக்க விண்வெளி ஓடமான சேலஞ்சர் விண்ணில் ஏவிவிடப்பட்ட 75 விநாடிகளில் வெடித்து சிதறியது. அதிலிருந்த பள்ளி ஆசிரியர் கிறிஸ்டா மக் ஆலிப்பி உட்பட ஏழு பேர்களும் மரணமடைந்தனர்.



# 13

ஜெயந்த் ஸ்டேஷனைத் தொட்டபோது -

நேரம் 3.50.

ஆட்டோ சார்ஜைக் கொடுத்துவிட்டு -

கையிலிருந்த சூட்கேஸோடு -

அவசர அவசரமாய் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான். சொற்பமாய் கும்பல் போட்டிருந்த ஜனங்களுக்கு மத்தியில் ஊடுருவி -

ஹிக்கின்பாதம்ஸ் புக் ஸ்டாலைத் தொட்டான்.

பார்வையை நாலாப் பக்கமும் தூவினான்.

சந்தியாவைக் காணோம்.

வண்டி பறப்பட -

இன்னும் பத்து நிமிஷங்கள்தான் இருக்கிறது. எங்கே சந்தியாவை இன்னும் காணோம்...?

தவிப்போடு காத்திருந்தான்.

இரண்டாவது பிளாட்பாரத்தில் ஜெயந்தி ஜனதா நீள உடம்போடு சாவகாசமாய் இளைப்பாறிக்கொண்டிருந்தது. பிரயாண அலுப்போடு கீழே இறங்கிய பிரயாணிகள் காப்பியையும் டீயையும் முகச்சுளிப்போடு வயிற்றுக்கு

வார்த்துக்கொண்டிருந்தார்கள். வண்டியின் கார்டு மணிக்கட்டைத் திருப்பி அடிக்கடி நேரம், பார்த்துக்கொண்டிருந்தார்.

பிளாட்பாரர - பூதாகரமான பீம் க்ளாக்கில் 3.55 ஆனபோது -

தோளில் மாட்டிய ஏர்பேக்கோடு -

சந்தியா வேகமாய் வந்து சேர்ந்தாள்.

வரும்போதே சொன்னாள்.

''ஸாரி ஜெயந்த்... ரொம்ப நேரமா காத்திட்டிருக்கீங்களா?''

''ஏன் இவ்வளவு லேட்...?''

''ஹாஸ்டல் பில்லை செட்டில் பண்ணிட்டு வர கொஞ்சம் நேரமாயிடுச்சு. சோதனையா ஆட்டோவும் கிடைக்கலை...''

அவள் சொன்ன அந்த விநாடி -

''ப்ரா ஆங்க்...''

டீஸல் எஞ்சின் கூவ -

பரபரத்தான் ஜெயந்த்.

''வா சந்தியா இன்னும் அஞ்சு நிமிஷந்தான் இருக்கு - ட்ரெய்ன் புறப்பட!''

இரண்டாவது பிளாட்பாரத்தை நோக்கி ஓடினார்கள்.

தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கம்பார்ட்மெண்ட்டைத் தேடிப் பிடித்து -

டி.டி.ஈ.யிடம் டிக்கெட்டுகளைக் காட்டி -

அவர் சரிபார்த்து 'டிக்' அடித்ததும் கம்பார்ட்மெண்ட்டுக்குள் நுழைந்தார்கள். கம்பார்ட்மெண்ட் அதிகம் கூட்டமில்லாமல் காற்றோட்டமாய் இருந்தது. டெபோனிர் படிக்கும் இளைஞன் - குழந்தைக்கு ரயில் ஜன்னலுக்கு வெளியே வேடிக்கை காட்டிக்கொண்டிருக்கும் ஒரு மார்வாடிப் பெண் - பனியன் பேண்ட்டோடு ஒரு இளைஞி ஆகியோர் முதல் பார்வைக்கு பிரதானமாய்த் தெரிந்தார்கள்.

இருவரும் இருக்கைகளில் போய் உட்கார்ந்தார்கள்.

அடுத்த சில நிமிஷங்களில் -



இந்த ராஸ்கல் எப்படி மோப்பம் பிடித்தான்?

ஜெயந்த் வியர்த்துப்போய் நிற்க தன்ராஜ் கேட்டான்.

''என்ன ஸார் பம்பாய்க்கு பயணமா?''

''த... தன்... ராஜ்... நீ... எ... எ... எப்படி...?''

''ஸார்... என்கிட்டேயிருந்து நீங்க தப்பிக்கவே முடியாது... உங்க நிழல்கூட சலிச்சுப்போய் உங்களை பின் தொடராமே விட்டுடும்... ஆனா நான் சலிக்கமாட்டேன்... பணம் என் கைக்கு வந்து சேர்ற வரைக்கும் நீங்க என் பார்வையோட எல்லையிலிருந்து தப்ப முடியாது...''

''த... தன்ராஜ்...''

பேசத் திணறினான் ஜெயந்த்.

தன்ராஜ் தொடர்ந்தான்.

''எனக்கு தகவல் கிடைச்ச கோயமுத்தூர் ஸ்டேஷன் வர்றப்ப ட்ரெயின் நகர்ந்துடுச்சு... நீங்க இருக்கிற கம்பார்ட்மெண்ட்ல வந்து ஏர்றதுக்கு முயற்சி பண்ணினேன். முடியலை... உடனே... பக்கத்து கம்பார்ட்மெண்ட்ல தொத்திகிட்டேன்... இங்கே ஈரோட்ல ட்ரெய்ன் நின்னதும் வர்றேன்... இன்னும் அஞ்சு நிமிஷம் இந்த ஈரோடு ஸ்டேஷன்ல வண்டி நிக்கும்... ரெண்டு நிமிஷத்தில் நீங்களா இறங்கி கீழே வந்துடுங்க... இல்லைன்னா... கொஞ்சம் தள்ளித்தான் ரெயில்வே போலீஸ் இருக்காங்க... அவங்ககிட்டே போய் உங்க லக்கேஜ் சந்தேகத்துக்கிடமா இருக்குன்னு ரிப்போர்ட் பண்ணுவேன்... அவங்க உங்க லக்கேஜை சோதனை போடுவாங்க... நீங்க ப்ரீப்கேஸ்ல வச்சிருக்கிற பத்தாயிரம் ரூபா எப்படி வந்ததுன்னு துளைப்பாங்க... எறங்கறீங்களா? போய் சொல்லட்டுமா?''

ஜெயந்த்தும், சந்தியாவும் இருட்டடித்துப் போன முகங்களோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டார்கள்.

தன்ராஜ் உறுமினான்.

''அசிங்கமா நான் ஏதாவது பேசறதுக்குள்ளே கீழே

இறங்குங்க...''

ஜெயந்த் சந்தியாவுக்கு கண்ணைக் காட்டினான்.

''எறங்கு சந்தியா''

இருவரும் இறங்கினார்கள்.

''இதுதானே பணம் இருக்கிற ப்ரீஃப்கேஸ்? உங்களுக்கு எதுக்கு சிரமம்...? இதை நானே எடுத்துட்டு வர்றேன்...''

கை நீட்டி ப்ரீப்கேஸை வாங்கிக்கொண்டான் தன்ராஜ்.

மூன்று பேரும் பிளாட்பாரத்தில் மௌனமாய் நடந்தார்கள்.


ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார்கள்.

தன்ராஜ் பவ்யமாகக் கேட்டான்.

''கோயமுத்தூர் போக ஒரு டாக்ஸி பிடிச்சுடலாமா ஸார்?''

சொன்னபடியே பிடித்தான்.

1542ல் இங்கிலாந்து அரசர் எட்டாம் ஹென்றியின் ஐந்தாவது மனைவி காதரின் ஹோர்வர்ட் என்பவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.



## 15

சரியாய் எண்பது நிமிஷம்!

டாக்ஸி கோவையை ஸ்பரிசித்து தன்ராஜ் வீட்டு முன்னால் மௌனமானது.

நேரம் எட்டு மணியை நெருங்கிக்கொண்டிருந்தது.

டாக்ஸியை அனுப்பிவிட்டு -

வீட்டுக்குள் நுழைந்தார்கள்.



கதவைச் சாத்தி தாழிட்டான்.

''உட்கார்ங்க ரெண்டு பேரும்.''

- நாற்காலிகளை எடுத்துப் போட்டான் தன்ராஜ்.

இருவரும் மௌனமாய் உட்கார்ந்தார்கள்.

''என்ன ஸார்... இப்பவாவது புரிஞ்சுக்கிட்டீங்களா இந்த தன்ராஜ் யார்ங்கிறதை? சூட்கேஸை திறக்க சாவி இருக்கா...? இருந்தா திறந்து பார்த்துடலாம்...''

ஜெயந்த் சாவியை எடுத்து -

அவனிடம் நீட்ட -

தன்ராஜ் ப்ரீஃப்கேஸ் லாக்கை விடுவித்தான்.

அதே விநாடி -

''டொக்... டொக்... டொக்...''

அறைக் கதவு யாராலோ சப்திக்கப்பட -

மூன்று பேரும் திடுக்கிட்டு நிமிர்ந்தார்கள்.

- சட்டென்று ப்ரீஃப்கேஸை கட்டிலுக்குக் கீழே தள்ளிவைத்துவிட்டு கதவை நோக்கிப் போனான் தன்ராஜ்.

தாழ்ப்பாளை 'ப்ளக்'கென்று சப்தித்து கதவைத் திறந்துவிட்டான்.

ஜெயந்தின் பெரியப்பா -

கைலாசம் -

புன்னகையோடு வாசற்படியில் நின்றிருந்தார்.

1981ல் வங்காள அதிபர் ஜியாவுர் ரஹ்மான் தம் எட்டு உதவியாளர்களுடன் படுகொலை செய்யப்பட்டு மரணமடைந்தார்.



## 16

ஹக் - கென்று அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்த

நாற்காலிகளை விட்டு எழுந்தார்கள் ஜெயந்த்தும், சந்தியாவும்.

கைலாசம் மெலிதான புன்னகையோடு அவர்களை நெருங்கினார்.

''என்ன ஜெயந்த்... தன்ராஜுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தையெல்லாம் கொடுத்துட்டியா?''

''பெ... பெ... பெரியப்பா...''

கைலாசம் சிரித்தார்.

''என்ன யோசிக்கிறே ஜெயந்த்? செத்துப் போன பெரியப்பா எப்படி உயிரோடு வந்தார்ன்னு பார்க்கறியா?''

ஜெயந்தின் உடல் நடுங்கியது.

தன்ராஜைப் பார்த்தான்.

''தன்... ராஜ்... என்ன இது...?''

தன்ராஜ் சிரித்தான்.

''பெரியவர்க்கு ஆயுசு ரொம்பவும் கெட்டி ஸார்... எப்படியோ உருட்டிவிட்ட காரிலிருந்து தப்பிச்சுட்டார்...''

ஜெயந்த் சுற்றும் முற்றும் பார்த்தான். சுவரோரமாய்க் கிடந்த அந்த நீளமான இரும்புக் கழி அவன் பார்வையில் தட்டுப்பட -

பாய்ந்து அதைக் கையில் எடுத்துக்கொண்டான்.

அதைக் காற்றில் வீசி ஆக்ரோஷமாய் கைலாசத்தின் தலையை நோக்கி ஓங்கினான்.

கையை கீழே இறக்க முடியாமல் போகவே -

திடுக்கிட்டு ஏறிட்டான்.

தன்ராஜ் தன் இடது கையால் அந்த இரும்புக்கழியை பிசாசுத்தனமாய்ப் பற்றிருந்தான்.

ஜெயந்த் கத்தினான்.

''தன்ராஜ்... விடு.''

கைலாசம் புன்னகைத்தார்.

''தன்ராஜ் விடமாட்டான் ஜெயந்த்...''

அதிர்ச்சியால் நிமிர்ந்தார்கள் ஜெயந்த்தும்,



சந்தியாவும்.

கைலாசம் மெல்ல நடந்துபோய் -

ஒரு நாற்காலியில் நிரம்பிக்கொண்டு புன்னகையோடு சொன்னார்.

''ஜெயந்த்... நீ என்னோட உயிருக்கு அம்பதாயிரம் ரேட் பேசினே... நான் என்னோட உயிருக்கு ஒரு லட்சம் ரேட் பேசி தன்ராஜ்கிட்டேயிருந்து என்னைக் காப்பாத்திகிட்டேன். ஊட்டி காட் ரோட்ல என்னோட காரை வழிமறிச்ச தன்ராஜ்கிட்டே என்னோட உயிரைக்காப்பாத்திக்க பிஸினஸ் பேசினேன். உன்னோட சுயரூபத்தையும் அப்பத்தான் தெரிஞ்சுகிட்டேன். அந்த நிமிஷமே என்னால உன்னை போலீஸ்ல ஹாண்ட் ஓவர் பண்ணியிருக்க முடியும். இருந்தாலும் உன்கூட கொஞ்சம் விளையாடிப் பார்க்க நினைச்சேன். நானும் தன்ராஜும் சேர்ந்து உனக்கும் சந்தியாவுக்கும் ஷாக் ட்ரீட்மெண்ட் குடுக்க திட்டம்போட்டோம். மலைச் சரிவிலிருந்து வெறும் காரை மட்டும் உருட்டி விட்டுட்டு - நான் பஸ் பிடிச்சு மைசூர் போயிட்டேன். தன்ராஜ் கோயமுத்தூர் திரும்பிட்டான். திட்டப்படி தன்ராஜ் போலீஸுக்கு போன் பண்ணி என்னோட கார் மலைச்சரிவுல உருண்டதை பார்த்ததாய்ச் சொல்லணும். ஆனா அதுக்கு அவசியமே இல்லாதபடி லட்சுமிகாந்த்ன்னு ஒருத்தர் கார் விபத்தைப்பத்தி போலீஸுக்கு தகவல் கொடுத்துட்டார். போலீஸ் உன்னைசந்தேகப்பட்டாலும் நீ சாமர்த்தியமா அந்த சந்தேக வலையிலிருந்து தப்பிச்சுட்டே... இங்கே நடக்கிற ஒவ்வொரு அசைவையும் டெலிபோன் மூலமா மைசூர்ல இருந்த எனக்கு தெரியப்படுத்திட்டிருந்தான் தன்ராஜ்... நான்தான் நம்ம லாயருக்கு போன் பண்ணி உயிலை மாத்தி எழுதிட்டதா உன்கிட்டே சொல்லச் சொன்னேன்... ஆனா உண்மை என்ன தெரியுமா ஜெயந்த்? இப்ப வேணுமின்னாலும் நீ போய்ப் பார்க்கலாம்... உயிலை உன்னோட பேர்க்குத்தான் எழுதி வெச்சிருக்கேன்...''

ஜெயந்த் கண்களில் நீர் கோர்த்தான்.

''பெ... பெ... பெரியப்பா...''

''நீ தன்ராஜ்கிட்டே என்னோட உயிருக்கு விலைபேசினப்பவே அந்த உறவெல்லாம் செத்துப்போச்சு ஜெயந்த்... நீ ஜெயிலுக்குப் போயிட்டு வா... எம் மனம் மாறுதான்னு பார்க்கலாம்...''

தன்ராஜ் நகர்ந்தான்.

கைலாசம் கேட்டார்:

''தன்ராஜ்... எங்கே போறே?''

''போலீஸுக்கு போன்பண்ண வேண்டாமா ஸார்...? நம்ம திட்டத்துல அதுதான் கடைசி ஆட்டம்...''

கைலாசம் சிரித்தார்.

(முற்றும்)

ஏஜெண்ட்டுகள், வாசகர்கள் அனைவருக்கும் எமது இனிய தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்!



ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில் அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜி. அசோகன். முகவரி: 6/352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5.

ஆசிரியர்: ஜி.அசோகன். தொலைபேசி: 28544294